[illegible]

V3 · No. 13 27 March 1930

M211, N128 KN ✓
M30·313
189097

1147

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா		காரியாலயம்:—
உள் நாடு	ரூ. 7 8 0	No. 11, வேளாளர் தெரு,
புற நாடு	ரூ. 9 0 0	புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ஸு மார்ச்சு மீ 27உ [No. 13.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 241
2. அப்பர் (சத்தப் பிரமம்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 243
3. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 245
4. ஆச்சரிய சூடாமணி (மாயாசீதை அங்கம்)
R. முத்தையர் 247
5. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 249
6. இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் தளர்ச்சி)
T. S. நடராஜபிள்ளை, BA., B.L 251
7. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 253
8. மலர்வனம்—"மதுகரம்" 256
9. வர்த்தமானம் 259

கலாநிலயம்

சுயநலச் சோதனை.

8

189097

அன்பலா தொன்றுமே யடைந்திலாச் சிந்தையால் நிறைவதே, யாவரும் எய்தவல்ல உண்மைநலமாகுமென்று நிறுவதற் கித்தனை முயற்சி வேண்டுமோ என்றொருவரும் ஐயுறவுகொள்ளலாகாது. எல்லாச்சமயங்களும் அன்பின்மேன்மையை அறைகின்றன. எட்டாம்வகுப்பு மாணவன் கட்டுரைத்தலைப்பிலும் 'அன்பு' நிற்கின்றது. பெரியோரும் சிறியோரும் சொரிகின்ற சொற்பொழிவிலெல்லாம் 'அன்பு' கலவா திருத்தலருமை. என்பொழி புழுவை நிகர்ப்பார் என்று அன்பிலார் வசையுண்ணும் வாய்கள் பற்பல. இவ்வாறாக, அன்பின் மேன்மை யாருமறியா வொரு மறைபொருளென்றோ இதுகாறும் இவ்வளவு வற்புறுத்தலாயிற்று என்று வியக்கவேண்டா. அன்பென்பது எவ்வாறு எவ்வெவர்க்கும் நன்மையாகின்றது என்று நாம் காட்டிவந்த காரணங்கள் எளிதில் அனைவரும் அறிந்திருக்கக்கூடியவைகளல்ல; ஒடியாங்கே ஓதுவா ரவைகளை உணர்ந்தவருமாகார். ஆயினும் அன்பின் பெருமையை நாட்டுதற்கு யாம் உரைத்திலம். காரணம் எதுவேயாயினும், அன்பிற்குச் சிறப்புண்டு என்னும் முடிவு, தெரிந்தோ தெரியாமலோ, மாறுபாடின்றி உலகடங்கலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதாதலால் காரணங்கள் காட்டி இதனை வாதிப்பது மிகை. ஆதலின், நாம் இதுவரையில் முயன்றது இம்முடிவை எய்துவதற்கன்று. மனிதர்க்கு அன்புஇன்றியமையாதது என்பதொன்று, அன்புதவிர பிறிதொன்றும் இன்றியமையாத தன்று என்பது வேறு. மனிதர் அடைதற்குரிய நன்மை அன்பென்பதைச் சொல்லிவருகின்றவர், வேறெதனிலும் நன்மையில்லை என்பதையும் தெள்ளிதின் உணர்தல் வேண்டும். இவ்வுண்மையை உணராக்கால் அன்பினை வழங்குவதெல்லாம் வெறும் வாய்முழக்கமாகவே முடியுமேயன்றித் தாம் உய்வதற்கும் மற்றவரை மெய்யுறு இன்பநெறி நன்மையில் உய்ப்பதற்கும் உதவாது. மற்றவர்க்கு நன்மையைச் செய்துவைக்கவேண்டுமென்ற ஊக்கத்தால் முயல்பவர், தாம் தமக்குக் கண்டனைய நன்மையைத்தானே செய்துதவச் சிந்திப்பார். ஆதலால், பொதுஜன நன்மையின்பொருட்டு விவகரிப்பவர் யாவரும், சுயநலம் இன்னதென்று ஐயந்திரிபற முதலில் தேர்ந்துகொள்ளாரெனின் தீமையே விளைவதற்கு உலகத்தை உழுது வைத்ததாக முடியும். முயல்வதெல்லாம் அன்பு பெருகி மிகுவதற்கு மாத்திரமே யாதல்வேண்டும் என்பதைச் சாதித்து மற்ற முயற்சிகளனைத்தையும் சிறிதும்இரக்கமின்றி ஒழித் தகற்றவேண்டுமென்பதை வற்புறுத்தும் நிமித்தம், நாம், அன்பில் தவிர வேறெதனிலும் எவ்வித நன்மையும் எள்ளளவேனும் இல்லை என்பதை, விதிகளாலும் உரைகளாலும் உதாரணங்களாலும் எம்மாலியன்றவரையில் விளக்கித்தர அவாவுடையவ ராயினோம். அவ்வாசையும் முயற்சியும் எத்தூரம் கைகூடின வென்பதை, இதனை யோதுவோருள்ளமே யுணர்தல் கூடும்.

அன்பு வேண்டப்படும் என்னும் உடன்பாட்டு உணர்ச்சியிலும், வேறெதுவும் வேண்டா என்னும்

எதிர்மறை நினைவு, இக்காலம் அதிகமும் அவசியமாகின்றது. மனிதரது நன்மைக்கென்று துவக்கப்பெறும் இயக்கங்கள், பொருள்பற்றியும் உரிமைபற்றியும் சமயங்களைப்பற்றியும் இன்னு மிவையனைய சிலவற்றைப் பற்றியும் பரவிச் சில வளர்வதும் ஒடுங்கிச்சில ஒழிவதும் ஆகி வருகின்றன. அன்பினை உரையால் மறுத்துப் பெரும்பான்மை இவை அகற்றுவதில்லை யாயினும், மனிதருக்கு நன்மையென்று நாட்டத்தைப்புறப் பொருள்களில் வலிந்து செலுத்தி வழக்கிடுவதால் அன்பிற்கு அடியோடு கேடுசூழ்கின்ற கருமங்களே யாவதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகின்றோம். கைத்தொழிலை வளர்த்து வர்த்தகத்தைப் பெருக்கி ஓட்டுப்பெட்டியில் எல்லாரையும் சமமாக அடைத்து, உத்தியோக வசதிகள் உண்டாக்கி, இந்தியர்கள் தம் "பிறப்புரிமையை"த்தாமெய்தி, அயல்நாடுகளுக்கு இந்நாட்டின் செல்வம் போய்ப் பாயாமல் தடுத்து, உலகத்திலே தாமும் ஒருவராக மதிக்கப்படும்படி தலைநிமிர்ந்து நிற்கக்கூடியவர்க ளாகவேண்டுமென்று தூண்டுகின்ற இயக்கங்களும், அவைகளுக்குத் துணை வினைகளாக முயலப்பெறும் தீண்டாமை, மதுவிலக்கு, மாதர்முன்னேற்றம், பொதுஜனக்கல்வி, சாரதா சட்டம், சாதிவேற்றுமை அனையவைகளின்முயற்சிகளும், இத்தலையங்கங்களில் நாம் வகுத்துள தன்மையில் உண்மை இலக்கணத்திற் கிணங்கக் கூடுமோ என்பதை அச்சமும் ஆசையுமின்றி ஆராயவேண்டாவோ! அவ்விலக்கணம், தர்க்கப்பிறழாது தீர்ந்த நேர்மையுடையதாயின் இவைகளில் ஒன்றையேனும் நன்மையென்று கொள்ளற்கில்லையே. அன்பினால் இவை நிகழ்கின்றன வென்பர் சிலர். அவ்வாறு அவை நிகழ்கின்றன வென்பதை அயிர்ப்பார் சிலர் முயன்றால் நிகழ்த்தலாம் என்பர். இத்துணையும் நம் நாட்டு ஏழ்மை அடிமை முதலியவைகளை ஒழிப்பதற்கே முயலப்படுகின்றன வாதலின் இவ்வியக்கங்களுக்கு ஆதாரமாயிருப்பது அன்பேயென்று சிலர் செப்புவார்.

இவ் விறுதிவாசகத்தை நாம் முற்றிலும் மறுக்கவில்லை; மறுக்க வேண்டிய அவசியமுமில்லை. முயல்வோரி லொருசிறுபாலார் மெய்யன்பினால் தூண்டப் பெற்றவர்களாகலாம். எனினும் இம்முயற்சி மற்றவர்களையும் அன்புடைய மேன்மக்க ளாக்குதற் குரியனவோ என்பதைச் சிந்திக்க வேண்டாவோ. முன்னரிங்கு நாம் எய்தியுள முடிவின்படி, பொருள்முதலிய உடைமைகளால் உள்ளம் நிறைந்து நன்மை எய்துதல் இயலாதென்பது வெளிப்படையானபின் அன்னவைகளில் ஊடாடுவது அன்புநெறிக்கு மாறுகுமென்று கொள்ளவேண்டியது முறைமையாகின்றது. அவ்வாறே மாறுகிப் பகைமையும் பொறாமையும் பேராசையுமே நாளுக்குநாள் மிகுந்து வருவதையே கண்டுவருகின்றோம். மனிதரும் தாம் என்புதோல் போர்த்த உடம்புமட்டுமே யென மேன்மேலும் உறவுறக் காட்டிவருகின்றனர். உண்மைப் புலமைசான்ற தாமஸ் கார்லைல் என்பவர் உரைத்த வண்ணம், "உலகத்தி விழுத்துவைக்கும் இத்தகைய பொருளலாப் பொருள்களில் கவனம்செல்லாது துறந்தபின்னர்தான் வாழ்க்கையென்பதே ஆரம்பமாகின்றது". ஏனெனில் அன்பிற்கு அவை அயலானவைகளாதலால் பண்பும் பயனுமிலாத என்புதோலுடைய உடம்பின் ஆட்டமே அல்லாது எஞ்சுவது வேறென்! இவைகளிலிருந்து அன்பு பிறக்கக்கூடுமானால் அது தீயினுள் நீர் சுரக்குமென்பதை யொக்கும்.

எல்லாருமெங்கு மின்புற்று இருப்பதுவேயன்றி வேறொன்று மறியா வாழ்க்கைக்கு ஆதாரமாயிருக்கின்ற அன்பு சுரந்துபெருகுதற்கு வழிகள் இவைகளல்ல வென்பதை எத்துணைமுறை எடுத்தியம்பினும் மிகை ஆகாது. அவரவர் தாம் கலைவளரு நெஞ்சினர்கள் ஆவதும், மற்றவரை அத்தகைய நெஞ்சுடையவர்க ளாக்குவதுமன்றி வேறோர் வழியில்லை. இஃதொன்றே இவ்வுலகின் நன்மை. அழகினது தோற்றமாகிய காவியம் சிற்பம் சங்கீதம் நடனம் முதலிய கலைகளின் இடையறாப் பயிற்சியொன்றே, பயிலுமாறு பயின்றக்கால், முழுவதும் நன்மைபாகிய இவ் வன்புநிலையில் நிறுத்த வல்லவதாவதும், அதுவே கடவுள்நிலை என்ன உணரவேண்டியதும், முன் பலவிடங்களில் விளக்கியிருக்கின்றோம் ஆதலின் அதனை ஈண்டு மெடுத்துரைத்தல் மிகை. இதனை யோதுவார், நாம் முன் "கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல் வகையும்" என்னுந் தலைப்பின் கீழ் (வால்யூம் 1 இதழ்கள் 2 முதல் 10 வரையில்) எழுதியிருப்பவைகளையும், பிறகு "கலைகளே கதி" என்ற தலைப்பின் கீழ் (வால்யூம் 2, இதழ்கள் 8 முதல் 13 வரையில் எழுதியிருப்பவைகளையும் சேர்த்து வாசித்துக்கொள்ளுமாறு விழைகின்றோம்.

இதன்படி யாவுந் தேர்ந்தக்கால் பிறகு 'நலம்' என்பதொன்றுமட்டுமே எஞ்சும். 'சுயம்' என்னுஞ் சொல் பொருளும் பயனுமற்றதாய் அதன்முன் நிற்கின்றதென்று யாவரும்எளிதில் உணர்வார். ஏனெனில், கலையுணர்வால், தன்னையே பிரபஞ்சமடங்கக் காணுமொருவன் தானென்னும் பிரிநிலைத் தனிமையில் நிற்பதரியதாகும். அரியதாயின் சுயநினைவு நிலைப்பதற்கில்லை. தான் என்றவன் யாரோவென மறந்துபோய் மற்றவர்களிடம் அவன் சென்று, "ஐய, நீ நீ என்று சுட்டிப் பேசுகின்றனரே, யான் யார், என் பெயரென்ன. எனக்கு இது நன்மை, எனக்கு இது தீது என்று உரைப்பதன் பொருளென்ன," என்றுகேட்கவேண்டிவரும். 'கொழுகொழு கன்றே, கன்றின் தாயே, மாடு மேய்க்கின்ற இடையா, இடையன் கைக் கோலே, கோல் வளருங் கொடிமரமே, மரத்திலிருக்குங் கொக்கே, கொக்குக்கு உணவாகும் மீனே, மீன் பிடிக்கும் வலையா, வலையுலர்த்தும் தரையே, தரை வளரும் புல்லே, புல் தின்னுங் குதிரையே... என் பேர் என்ன, என் பேர் என்ன?" வென்று கேட்டுச் சென்று திரிந்த ஈயினை ஒக்குமோர் நிலையே நன்னிலையாகும். நம்நாட்டு முழுமூதாட்டிகள் இளஞ்சிறார் மனதில் இக்கதைமூலமாய்ப் பெருந் தத்துவங்களை ஊறவைக்கின்ற மரபினால் நிகழ்கின்ற முறையாம் இது. இறுதியில், குதிரை கனைத்ததிலிருந்து அச் சந்து தன் பேர் 'ஈ' என்று நினைத்துச் சென்றது என அந்தக்கதை முடிவதுபோலவே, விஷயம் இன்னதென்று தெரியாத சிலர் செய்கின்ற ஓசையெல்லாம் தத்தமைக் குறித்துமொழிகின்ற பொருளுரைகளெனக் கருதி அதனின்று தம் பேரும் தமக்குரிய நன்மையுங் கற்றுக்கொண்டுபோகின்ற காலம் பொல்லாங்குடையதாய் முடியவேவேண்டுமே யன்றி வேறன்று.

கலையுணர்விற்குரிய பயிற்சி மனிதரைத் 'தான் தனது' என்னுந் தனிநிலைப் பொய்மையினின்று விடுவித்து உலகினோடொன்றாய் மயங்கச் செய்யும். அம் மயக்கமே அன்பு. அவ்வன்பே உலகின் நன்மை. சுயநலம் என்ற சொற்றொடர்க்கு இனி இடமில்லை. அன்பும் இன்பமும் அமைதியும் எய்தி, நம் பெரியோர் "சாந்தி சாந்தி சாந்தி:" என மும்முறை கூறும் ஆசி எம்மருங்குங் கைவரக் காணலாம்.

அப்பர்

8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

6. சத்தப் பிரமம்.

(ii) சப்தத்தின் சிறப்பிலக்கணம்.

ஒளி ஓசை முதலிய சக்திகள் யாவும் உலகத்தில் * தரங்கங்கள்போல் பரவுமென்பது முன்னரே கண்டோம். இத்தரங்கநடை பெரும்பாலும் இருவகைத்து. கிடநடை பொன்று, சர்ப்பநடை மற்றொன்று. கிடம் அல்லது புழுவானது முதுகு மேலே வளைத்துச் சென்றபோதிலும் நேர்வழியாய்ச் செல்லல் அதன் நற்குணமாம்:—

225வது பக்கத் தொடர்ச்சி.

புழுவுக் குங்குண நான்கெனக் கும்மதே
பழுவுக் கிங்கேனக் குள்ளபோல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்றமர்
குழுவுக் கேவ்விடத் தேன்சென்று கூடவே.

தனிக்குறுந்தொகை 4.

இந் நற்குணத்தாலே பல்லாயிரம் புழுக்கள், நமது தேகத்தில் ஆக்கப்பட்டுத் தோலால் மூடப்பட்டும், நமக்கு யாதொரு துன்பமும் பயக்காமல் பல சங்கடங்களினிடையே வாழவும் செய்கின்றன வல்லவா?

புழுப்பெய்தபண்டி தன்னைப்புறமொரு தோலான்மூடி
ஒழுக்கறுவொன்பதுவாயொற்றுமையொன்றமில்லை
சழக்குடை யிதனுளைவர் சங்கடம் பலவுஞ்செய்ய
அழிப்பனாய் வாழமாட்டே னாரூர் மூலட்டனீரே!

திருவாரூர் - திருநேரிசை 2.

இத் தன்மையுள்ள கிடம் அல்லது புழுநடை † ஒளிக்கு உண்டு. ஒளியின்தரங்கம் மேலுங் கீழும் இறங்கினும் ஏறினும் நேர்வழியே செல்லுமன்றிக் கோணல் கோணலாய்ச் செல்லச் சக்தியற்றதாகும் - (ஒரு சிறு துவாரதின் வழி வெளிச்சத்தை விட்டுப் பார்ப்பின் நன்றாய் விளங்கும்)

ஓசையின் தரங்கமோ அவ்வாறன்று. இதன் நடை சர்ப்ப நடையாகும். ‡ நேரே செல்லவேண்டுமாயினும் ஒரு நாகமானதெவ்வாறு கோணலாய் வளைந்துவளைந்துசெல்லுமோ அதுபோல் சப்தமானது நேரிற்செல்லும் அலைகளிலும், கோண லதிகமான வளைவுகளுடன் செல்வதாகும். இதனால் ஒலியை வெளியிற் பரவவொட்டாமல் தடுக்கும் ஒரு அறை அல்லது பெட்டியின் இடையே பாடிய வாத்தியவோசை ஒரு சிறு துவாரத்தின்வழியே வெளியில் வருமாயின், வெளிச்சம்போல் ஓரே முகமாய்ப் பாயாமல், பல திசைகளிலும் பரவி யாவர்செவிக்கும் பயன்படுகின்றதைக் காண்கிறோமல்லவா? ஏனெனில் ஒரு அறையின் துவாரத்தின் வழி அநேக பாம்புகள் வெளிவந்தால், அவை எவ்வாறு நாற்றிசையும் ஓடுமோ, அவ்வாறே சப்தத்தரங்கங்கள் நாற்றிசையும் பரவுமென்பர் இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள். ஆயினும் அவற்றுள் நேரெதிரிற் பாய்வன பல; பக்கங்களிற் செல்வன சில; பின்னுக்குச் செல்வன மற்றுஞ் சில ஆகையால் நாம் ஒரு மண்டபத்தில் இசையோன் முகத்திற்கு முன்னர் முப்பது அடியில் கேட்கும் இசை, அவன் முதுகைப் பார்த்தாற்போல் பின்னர்ப் பதினைந்து அடியிலிருந்தாலும் அவ்வளவு சுத்தமாய்க் கேளாது. இதனாலேயோ, நமது இசைமண்டபங்களில், இசையோனை இடையிலிருத்தாது சற்று ஒருபக்கமாய் (அல்லது சுவரிற்குச் சமீபமாய்) இருத்திக் கச்சேரி நடப்பது, தொன்றுதொட்டுவரும் வழக்கமாயிற்று. அதன் காரணம் ஆராயின் ஓசைத்தரங்க வியல்பேயாம். எனவே ஓசையின் சிறப்பிலக்கணமாய் விளங்குவனவற்றில் ஒன்று, அதன் தரங்கம் சர்ப்பநடையாய் நிகழ்வதாம்.

ஓசையானது சர்ப்பவடிவுடைத் தரங்கங்கள் பெற்றதென்பது உருவகத்திலேயே நிற்கவில்லை. மயக்கத்தையும் தருவதென்பர் நமது முன்னோர். ஏனெனில் நாதவுச்சரிப்பு மயக்கந்தரும் மகரவொற்றிலே பிறக்கும். இதனைச் சிவவாக்கியார், அக்ஷரசக்தி கூறுங்காலை,

அகரகா ரணத்துளே யநேகநேக ரூபமாய்
உகரகா ரணத்துளே யுருத்தரித்து நின்றவன்
மகரகா ரணத்துளே மயங்கிநின்ற வையகம்
சிகரகா ரணத்துளே தெளிந்ததே சிவாயமே

என்றனர். திருஞானசம்பந்தரும்

ஊறினா ரோசையுள் ளொன்றினா ரொன்றிமால்
கூறினா ரமர்தருங் குமரவே டாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே

திருத் தென்குடித்திட்டை - பண் - கொல்லி. 6.

என்பர்.

இவ்வாறு ஓசையானது சர்ப்பநடையிற் பரவுவதற்குக் காரணம் ஆராயின், அது அதன் மூலாதாரக் குணமேயாம். ஒலி, ஓசையின் விருத்திபோல், ஓசை நாதத்தின்விருத்தியாய்; நாதமும் § ஓங்காரத் தத்துவத்திலிருந்து எழும்.

* பரமன் சக்திகளில் ஒன்றாகிய சங்கரபவானியும், திரைகளால் விளங்குவதைக் காண்க:—

எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்க
ளிளநிலாத் திகழ்கின்ற வளர்ச டையனே
கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி
கொங்கையிணை யமர்பொருதுகோலங்கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூ லுண்டே
சாந்தமொடு சந்தனத்தி னளறு தங்கி
அழுந்தியசெர் திருவுருவில் வெண்ணீற் றானே
யவனாகி லதிகைவீ ரட்ட னாமே.

திருவதிகை வீரட்டானம் - திருத்தாண்டகம் 10.

† Longitudinal motion.

‡ Transverse or oblique motion.

§ இசைக்குப் பிறப்பிடமான வாதாரம்:—

துய்ய வுடம்பளவு தொண்ணூற்று றங்குலியா
மெய்யெழுத்து ளின்றியங்கு மெல்லத்தான் — வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்.

ஊனங் கத்துயிர்ப் பாயுயிர்க் கெல்லாம்
ஓங்கா ரத்துரு வாகிநின் றானை
வானங் கத்தவர்க் கும்மளப் பரிய
வள்ள லையடி யார்கடம் முள்ளத்
தேனங் கத்தமு தாகியுள் ளூறுந்
தேச னைத்தினைத் தற்கினி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே !

சுந்தரர்.

இதையே திருநாவுக்கரசுநாயனாரும், கூறுவர்:—

உருமூன்றா யுணர்வின்க ணொன்றா னானை
ஓங்கார மெய்ப்பொருளை யுடம்பி னுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் றன்னைக்
காலனைத்தன் கழலடியாற் காய்ந்து மாணிக்
கருளீன்ற வாரமுதை யமரர் கோனை
யள்ளூறி யெம்பெருமா னென்பார்க் கென்றுந்
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே !

திருவாலம்பொழில் - திருத்தாண்டகம் 3.

ஓங்காரத் தத்துவத்தில் சப்தம் நிலைபெறுவதால் நவீன நாகரிகத்தில் கம்பியற்ற மின்சாரமென்னும் தந்தித்தபால் நிகழ்வதும் இயற்கைத்தத்துவ சாஸ்திரிகள் அறிந்ததேயாம். ஓசையானது எழுப்பும் தரங்கம் ஓங்காரத்திலமைய ஆகாய (Ether) தத்துவத்தில் தரங்கமாய் அதைப் பல்லாயிரம் மைலில் உள்ள யந்திரம் கவர்ந்து பெருக்கி ஆதியில் உண்டான ஓசையை மறுபடியும் எழுப்பும். எனவே சப்தத்தின் இரண்டாவது சிறப்பிலக்கணம் எத்திக்கிலும் விரிவதும் குவிவதுமாம் *.

மூன்றாவதுசிறப்பிலக்கணம், சப்தத்திற்கு உயிர்ப்பு அடிப்படையாய்ப் பெறுதல். ஆகாய தத்துவத்தில் சப்தத்தின் அலை யாடினும், வாயுசம்பந்தமின்றி † சப்தம் பரிணமிக்காது. வாயுமண்டலத்திலடங்கும் எட்டுத் திசைக்கண்ணே ஓசை பரவுமன்றி, அம்மண்டலத்தைத் தாண்டிச் செல்லாதாம்.

(iii) நாதத்தினின்று இசையெழும் வகை.

ஓசையானது தரங்க வடிவாய்ச் சர்ப்ப நடையில் பரவுவ தறிந்தோம். இதன்றியும் இதற்கு ஒளிபோல் ஆகாய தத்துவமே போதாது; நமது செவிப்புலனுவதற்கு வாயுசம்பந்தமும் பெறவேண்டு மென்பதும் கண்டோம். ஆதலால் இதன் தரங்கம் ஒளியின் தரங்கத்தைக் காட்டினும் பன்மடங்கு மந்தமாதலால், ஒளியைப்போல் தரங்க அளவு அதிசூக்குமக் கீழ்க் கணக்கில் நில்லாமல் தடஸ்த லட்சணம் காணக்கூடியதாயிருக்கும். சப்தமானது ஒரு விநாடிக்கு 1100 அடி செல்லுமென்பர். இது எவ்வகைச் சத்தமாயினும் வேகம் ஒன்றேயாம். ஓசையின் தரங்கப் படபடப்பு (Frequency of Vibration) மட்டாயின், தரங்க அளவு அல்லது நீளம் அதற்குத் தக்கவாறு அதிகமாகும். படபடப்பு அதிகமாயின் தரங்க அளவு அதற்குத் தக்கவாறு சிறுக்கும். ஆயினும் ஓசைத் தரங்கத்தின் படபடப்பு அல்லது துடிப்பே நமது செவிப்புலனுக்குக் கேட்கக்கூடிய ஓசைகளிவையென வரையறுப்பதுவாம்.

சாதாரணமாய் மனிதர்கள் கேட்கக்கூடிய ஓசையின் படபடப்பு ஒரு விநாடிக்குக் குறைந்தது முப்பதும், அதிகம் 20,000மும் ஆம். குழந்தைகள் விநாடிக்கு 16 துடிப்புடைய ஓசையைக் கேட்கும். வயது முதிரமுதிர எல்லைகள் குறையும். பண்ணமைப்புக்கு ஒரு விநாடிக்கு40-லிருந்து 4000-வரை துடிப்பின் அளவாகும். இது ஆங்கிலேயக் கணக்கின்படி 100-அடி வரையிலேயே கேட்குமென்பர். நமது நாட்டிலோ ஒருமைல் தூரம் கேட்கத்தக்க குரலுடன் பாடுவோருமுளர். இதன் காரணமென்னையெனின், மனிதன் மிடற்றுக்குள் இலங்கும் இசை நரம்புகளும் அவற்றின் அறைகளும், மனிதனாலாக்கப்பட்ட எவ்வித இசைக்கருவிக்கு மில்லை. இதனால் எல்லைகளை உத்தேசத்திற் கூறலாமேயன்றி இவைதாமென நிர்ணயிக்க முடியாதனவா யிருக்கின்றன.

ஓசையென்பது தரங்க அளவுக்கும் அதன் படபடப்புக்கும் அதீதமானது. மேலே கூறிய தரங்க அளவுஎல்லைகளி லிருக்கும் சப்தம் கேளாமலு மிருக்கலாம். அது ஓசையின் கனக்குறை யென்பர். ஆயினும் அது நாதமாகும். யோகாப்பியாசத்தால் ஐம்புலன்களைத் தன்வழிச் செய்த மேலோர் நாதத்துவத்திலீடுபட்டு அதில் இன்புறுவரென்பது பற்பல தத்துவ நூற்களிற் காண்கின்றோம். வீணையிலும் நாம் விரல்கள்தடவாமல் விடுமிடங்களிற் சிலவும்இத்தகையவே. ஆய்வதற்கரியதாய் ஆங்காங்கு ஆடும் தேவவோசைகளை நாம் எவ்வாறு விளக்குதற்கியலும் ?

நீருமாய்த் தீயுமாகி நிலமுமாய் விசும்புமாகி
ஏருடைக் கதிர்களாகி யிமையவ ரிறைஞ்சநின்று
ஆய்வதற் கரியராகி யங்கங்கே யாடுகின்ற
தேவர்க்குந் தேவரானார் திருப்புக லூரனாரே.

திருப்புகலூர் - திருநேரிசை 8.

வேத னைமிகு வீணையின் மேவிய
கீத னைக்கிள ருந்நறுங் கொன்றையம்
போத னைப்புனல் சூழ்ந்தபுத் தூரனை
நாத னைநினைந் தென்மன நையுமே.

திரு அரிசிற்கரைப்புத்தூர் - திருக்குறுந்தொகை 3.

நாதமிகுதியே ஓசையாய் நமது செவிக் கெட்டும். நாதம் பிரமஞானிகளுக்கே யறியக்கூடியதென்பர் மேலோர். பிரணவத்தில * நாதம் பிறந்து உலகமே வெளியானதென்பது நமது மறைகளின் மாத்திரமன்றிக் கிறிஸ்தவவேதத்தில் யோவான் சுவிசேஷத்தில் முதல்வாக்கியமே அதை வெளிப்படுத்தும். ‡ எனவே

* விரிந்தானைக் குவிந்தானை வேத வித்தை
வியன்பிறப்போ டிறப்பாகி நின்றான் றன்னை
அரிந்தானைச் சலந்தான்ற னுடலம் வேறா
ஆழ்கடனஞ் சுண்டிமையோ ரெல்லா முய்யப்
பரிந்தானைப் பல்லசுரர் புரங்கண் மூன்றும்
பாழ்படுப்பான் சிலைமலைநா ணேற்றி யம்பு
தெரிந்தானைத் தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே !

திருவாலம்பொழில் - திருத்தாண்டகம் 6.

† "ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்து
மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு - போதாரு
மூந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்துமே லோசையாம் வைப்பு."

* பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்
அரிய பாடல ராடல ரன்றியும்
கரிய கண்டத்தர் காட்சி பிறர்க்கெலாம்
அரியர் தொண்டர்க் கெளிய ரையாறரே.

திருவையாறு - திருக்குறுந்தொகை 5.

‡ In the beginning was the Word, and the Word was with God, and the Word was God.

பிரணவம் சர்வத்திற்கும் மூலாதாரமாயும்,அதனின்று பிறக்கும் நாதம் சீவன் முக்திநிலையி லுள்ளோர்க்கும், ஓசை, பண்டித பாமரர்களுக்கும் பயன்தரும். ஓசை மிகுந்து ஒலியாயின் இன்பம் அதிற்குறைவே யாம். பேரொலி *மிகுப்பின் நமது செவிக்கதீதமாய்க் கேளாதொழியும். பின்னர் அந்தத்தில் பிரணவத்தில் லயமாமென்பர். இவ்வாறு நாதத்தின் விருத்தி நிகழ்கின்றது.

* புகழொளியைப் புரமெரித்த புனிதன் றன்னைப்
பொன்பொதிந்த மேனியனைப் புராணன் றன்னை
விழவொலியும் விண்ணொலியு மானன் றன்னை
வெண்காடு மேவிய விகிர்தன் றன்னைக்
கழலொலியுங் கைவளையு மார்ப்ப வார்ப்பக்
கடைதோறு மிடுபிச்சைக் கென்று செல்லுந்
திகழொளியைத் திருமுதுக்குன் றுடையான் றன்னைத்
தீவினையே னறியாதே திகைத்தவாறே.

திருமுதுக்குன்றம் - திருத்தாண்டகம் 6.

தமிழ்ப் பாடம் 115.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[236-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

தங்கள் உரிமையைத் துறந்து இரவலர்போல் யாசித்துஐந்தூர் பெற்றுவாழ்தலுக்குத் தருமனுடன் சகாதேவனும் இசைவதாகச் சொன்னதுடன், கபடன் கண்ணனும் 'ஓம்' என்று சாற்றலும், மனம் பொங்கி, 'மாசுற்றவென் கூந்தல் என்று முடிப்பேன்' என்று கண்ணன்பால் முறையிட்டுங் கதறியதை முன் கண்டோம். அவள் கதறலுக்கும் கண்ணன் காது கொடாதிருந்தது கண்டு மனம்பொறாத சாத்தகி பாண்டவர்களையும், தன் தமையனையும் பின்வரும் இரண்டு பாசுரங்களால் கடிகின்றான்..

தண்டிருந்த திவன்கரத்தில்
தனுவிருந்த தவன்கரத்தில்
வண்டிருந்த பூங்குழன்மேன்
மாசிருந்த தெனவிருந்தாள்
கண்டிருந்தீ ரெல்லீரும்
கருதலர்பா லூர்வேண்டி
யுண்டிருந்து வாழ்வதற்கே
யுரைக்கின்றீ ருரையீரே. 34.

பதவுரை.

திரௌபதியை (இராஜ சபைக்கு அழைத்துவந்து துச்சாதனன் துகிலுரிந்த அந்நாள்), இவன் கரத்தில்-பீமசேனனது கையில், தண்டு - கதை, இருந்தது - இருக்கவில்லையோ! அவன் கரத்தில் - அர்ச்சுனன் கையில், தனு-வில், இருந்தது - இருக்கவில்லையோ! (கதையும் வில்லும் இருந்தும்) வண்டு இருந்த-வண்டுகள் விரும்பித் தங்குவதற்கு இடமாய் அமைந்த, பூம்-அழகிய, குழல்மேல் - திரௌபதியின் கூந்தலில், மாசு - (துச்சாதனன் பற்றியிழுத்ததால் ஏற்பட்ட) பழுது, இருந்தது-நீங்காது இருந்தது, என் - என்று எல்லோரும் சொல்லும்படி, இருந்தாள் - திரௌபதி அப்பழிக்கு ஆளாகி இருந்தாள். எல்லீரும் - பாண்டவர்களாகிய நீங்கள் எல்லீரும், கண்டு இருந்தீர் - அதனைப் பார்த்துக்கொண்டு இருந்தீர்கள்.

(இனியும்) கருதுஅலர் பால் - உங்களை மதியாதவர்களிடத்தில், ஊர்வேண்டி - ஐந்து ஊர்களை யாசித்துப்பெற்று, உண்டு இருந்து - (வெட்கமிலாது) வயிறு வளர்த்து, வாழ்வதற்கே-உயிர்வாழ்ந்து இருப்பதற்கே, உரைக்கின்றீர் - உரைக்கின்றவர்களாகிய பாண்டவர்களே, உரையீர் - (இது முறையா) சொல்லுங்கள்(என்றான் சாத்தகி).

விரிவுரை:—கிருஷ்ணனுடைய தந்தை வசுதேவனுக்கும் சத்யகைக்கும் பிறந்த முறையால் சாத்தகி கிருஷ்ணனுக்குத் தம்பியாவான்.

உடன்பிறந்தோர் என்பதையும் நினையாது பாண்டவர்க்குப்பல இடுக்கண் புரிந்தும்,பெண்ணென்றும் பாராது திரௌபதியை மானபங்கம்செய்தும்,வனவாசம் செய்து திரும்பியவர்க்கு அவர் பாகத்தை ஈயமறுத்தும் நிற்குமிக் கொடியோனைப் போரில் தண்டித்துத் தம் நாட்டினை மீண்டுமடைய முயலாது கோழைகள் போல் பேசுவதைக்கண்டு ஆற்றாது, இந்தவுரை வழங்கினான் சாத்தகி. வழங்கிய இவ்வுரை தருமனது மனத்தில் கிளர்ச்சியொன்றும் விளைவிக்கவில்லை. பின் கண்ணனைப் பார்த்தான். அவ் வேஷதாரியினுடைய வாய்ப்பூட்டிற்கும் திறவுகோலாய்த் தன்னுரை அமையாது போகவே, மனதிற் சினம் மூள இன்னும் சிறிது கடுமையுடன் அவன் உரை பிறக்கலாவதை அடுத்த செய்யுளில் காணலாம்.

குறிப்பு:—இந்தச் செய்யுளில் இருந்து என்னும் சொல், பலமுறை ஓரேபொருளில் வந்திருப்பது, சொல்பொருள் பின்வருநிலை அணியாகும். இதன் இலக்கணத்தை முன் "போர்முடித்தான் அமர்பொருது" என்று தொடங்குகின்ற செய்யுளின்கீழ் (வால்யூம் 3, பக்கம் 131) உரைத்திருக்கக் காணலாம்.

சண்டமுகி லுருமனைய சராசந்தன் றனக்கஞ்சி
வண்டுவரை யரணாக வடமதுரை கைவிட்ட
திண்டிறன்மா தவன்மதியோ திகழ்தருமன்
[றன்மதியோ
பண்டுமவர் கருத்தறிந்து பார்போய்வேண்
[டுவதென்றான். 35.

பதவுரை.

(தனது உரையைத் தொடர்ந்து சாத்தகி),அவர் - துரியோதனாதியர்களுடைய, கருத்து - எண்ணத்தை, அறிந்து - அறிந்தபின்னும், பண்டும் - மறுபடியும், போய் - அவர்களிடம் சென்று, பார் - இராஜ்யத்தை, வேண்டுவது - யாசிக்கின்ற இது,

சண்டம் - பெரிய, முகில் - மேகம், உரும் - இடிக்கின்ற இடியை,அனைய-ஒத்த(அச்சமுறுத்துவானான) சராசந்தன் தனக்கு - சராசந்தனுக்கு, அஞ்சி-பயந்து,

வள் - வளப்பமுடைய, துவரை - துவாரகையை, அரண் ஆக - தனக்குக் காப்பாகக் கொண்டு, வடமதுரை - வடமதுரையை, கைவிட்ட - விட்டுவிட்டு ஓடின, திண் - வலிமைபொருந்திய, திறல் - பராக்கிரமம் உடைய, மாதவன் - கிருஷ்ணனது, மதியோ - புத்தியோ: (அல்லது) திகழ்-விளங்குகின்ற, தருமன் தன் - தருமராஜனுடைய, மதியோ - புத்திதானோ, என்றான் - என்று பரிகாசமொழி கூறினான்.

விரிவுரை:—பிருகத்திரதன் என்பவனுக்குக் கௌசிகமுனிவர் அளித்த மாங்கனிபொன்றை அவன் பட்டமகிஷியிடம் கொடுக்க, அதனை அவள் தன் சக்களத்தியோடு பகிர்ந்து உண்ணவும், இருவரும் கருப்பம் உற்று ஒரு பிள்ளையின் பாதிப்பாதி பாகத்தைத் தனித்தனிப் பெற்றனர். அப்பொழுது ஜரை என்னும் பெயருடைய அரக்கியொருத்தி மாயத்தால் அவ்விரு பாதிகளையும் கவர்ந்துசென்று ஒன்றாய்ச் சேர்த்துப் பிருகத்திரதனிடம் கொடுத்தனள். ஜரை என்பவளால் இவ்விதம் சந்திசெய்யப்பட்டதால் அவனுக்கு ஜராசந்தன் என்னும் காரணப்பெயர் வந்தது. இச்சராசந்தன், தன் மருகனான கம்ஸனைக் கொன்ற கண்ணன் மீது கோபங்கொண்டு படையெடுத்துச் சென்று அவனை வடமதுரையிலிருந்து துவாரகைக்குத் துரத்தியகதை இங்குக்குறிக்கப்பட்டிருக்கிறது. பிறகுபாண்டவர் செய்த ராஜஸூயயாகத்தில் கிருஷ்ணனை இகழ்ந்து பேசியதற்காகப் பீமசேனன் அவனைப் பொருது கொன்றனன். அந்தத் தனிப்போரில் வீமன் எத்தனைதரம் அவனைக் கிழித்தெறிந்தாலும், மீண்டும் மீண்டும் அவ் அங்கங்கள் ஒட்டிக்கொண்டதால்சலிப்படைந்து திகைத்தபோது, அருகிருந்த கண்ணபிரான் ஒரு துரும்பை யெடுத்து இரண்டாகக் கிள்ளி அவைகளை மேலும் கீழுமாக வைத்துக் காட்டினான் என்றும், இக்குறிப்பை வீமன் கண்டுகொண்டு மறுமுறை சராசந்தனைக் கிழித்தவுடன் அத் துண்டுகளை மேலும்கீழுமாக மாற்றிப் பொருத்தவே, அவை அப்படியே ஒட்டிக்கொள்ளச் சராசந்தன் செயலற்று ஒழிந்தனன் என்றும் சொல்வர்.

திண்திறல் மாதவன் என்று கண்ணனையும், திகழ் தருமன் என்று தருமனுக்கு அடைமொழிகொடுத்தும், வஞ்சப்புகழ்ச்சியாய்ச் சாத்தகி கூறிய இவை சினத்துடன் கலந்த பரிகாசமொழிகள் என்பது வெளிப்படை.

தொல்லாண்மைப் பாண்டவர்க்குத்
தூதுபோய் மீண்டதற்பி
னல்லாயுன் பைங்கூந்த
லானே முடிக்கின்றே
னெல்லாருங் காணவினி
விரிப்ப தெண்ணரிய
புல்லார்த மந்தப்புர
மாதர் பூங்குழலே. 36

சாத்தகி இவ்வண்ணம் உரை வழங்கவும், அது கேட்ட கண்ணபிரான், பாண்டவரையும் அழுது கொண்டுநிற்கும் திரௌபதியையும் அருளுடன் பார்த்து அவளுக்குத் தேற்றமொழி கூறுவான்.

பதவுரை.

தொல் ஆண்மை - பழமையான நெறியில் வழுவாத பராக்ரமம் உடைய, பாண்டவர்க்கு - பாண்டவர்களுக்காக, தூது போய் - தூதாகப்போய், மீண்டதன் பின் - திரும்பிய பிறகு, நல்லாய் - பெண்ணே, உன் - உனது, பை - பசுமையான, கூந்தல் - கூந்தலை, நான் ஏ - நானே, முடிக்கின்றேன் - முடித்துவைக்கின்றேன்.

எண் அரிய - கணக்கிலடங்காத, புல்லார்தம் - அற்பர்களாகிய துரியோதனாதியர், அந்தப்புரம் மாதர் - அந்தப்புரத்தில் இருக்கும் மாதர்களுடைய, பூம் குழலே - அழகிய கூந்தலே, இனி - இனிமேல், எல்லாரும் காண - எல்லாரும் காணும்படி, விரிப்பது - விரித்திருப்பது ஆகும், (என்றான் கண்ணபிரான்)

இலக்கணம்

B. இரண்டாம் வேற்றுமை.

கரடியைப் பிடித்தான், கரடி பிடித்தான், கரடிப் பொறி, என்னும் இம்மூன்று வாக்கியங்களிலும் நிலைமொழியாகிய கரடி என்பது இரண்டாம் வேற்றுமையிலிருக்கின்றது. ஆனால், முதல்வாக்கியத்தில் இரண்டாம்வேற்றுமை உருபாகிய ஐ என்பது விரிந்திருப்பதால், அத்தொடர் இரண்டாம் வேற்றுமைத்தொகாநிலைத்தொடர் ஆகும். மற்ற இரண்டு வாக்கியங்களிலும் ஐ உருபு தொக்கு இருக்கின்றது. ஆகையால் அவை தொகைநிலைத்தொடர். எனினும், கரடி பிடித்தான், என்பது கரடியைப் பிடித்தான் என உருபு மாத்திரம் விரிவதுடன் பொருள்படுமாகையால், அதனை இரண்டாம் வேற்றுமைத் தொகை யென்றும், மற்றது, கரடியைப் பிடிக்கும் பொறிஎன உருபோடு வேறொரு சொல்லும் விரியவேண்டியிருப்பதால் உருபும்பயனும் உடன்தொக்க தொகை என்றும் ஆகும். இவைகளின் இலக்கணம் முன்னரே 1வதுவால்யூம், 729, 750, வது பக்கங்கள், 2வது வால்யூம்,355, பக்கம் விரிவாக உரைக்கப்பட்டிருக்கின்றது

நிலைமொழி இரண்டாம் வேற்றுமைச் சொல்லாக இருக்க வருமொழிமுதல் வல்லினமெய் வந்து புணர்கின்ற விதிகளைப் பார்ப்போம்.

I. நிலைமொழி இயற்கையில் எந்தஈற்றுச் சொல்லாயிருப்பினும் அது இரண்டாம் வேற்றுமை ஐ என்னும் உருபோடு சேர்ந்து இருக்குமானால் வருமொழி முதலிலுள்ள வல்லினமெய் மிகுந்தே புணரும்.

எருதை + கட்டினான் = எருதைக் கட்டினான்
புலியை + துரத்தினான் = புலியைத்துரத்தினான்
காட்டை + சேர்ந்தான் = காட்டைச் சேர்ந்தான்
பாயை + பிய்த்தான் = பாயைப்பிய்த்தான்
ஊரை + காட்டினான் = ஊரைக்காட்டினான்
புகழை + பெற்றான் = புகழைப்பெற்றான்.
இராமனை + பார்த்தான் = இராமனைப் பார்த்தான்.
மரத்தை + குடைந்தான் = மரத்தைக்குடைந்தான்.
காலை + பிடித்தான் = காலைப்பிடித்தான்.

குறிப்பு:—எருது, புலி, கரடி, என்பன உயிரீற்றுச் சொற்கள். பாய், ஊர், புகழ் என்பன உயிரீறுபோல் புணர்ச்சிவிதிபெறுகின்ற யகர ரகர ழகர மெய்களை ஈற்றிலுடைய சொற்கள் (3வது வால். 176வது பக்கம்). மரம், கால், இராமன் என்பன வேறு மெய்களை ஈற்றிலுடைய சொற்கள். எனினும் இவையனைத்தும் ஐ உருபு ஏற்றவுடன் வருமொழி வல்லினம் மிகுகின்றதைக் காணலாம்.

முதலை, ஆமை, தலை, மதலை, யானை, பனை, என்பன போல் ஐ என்னும் உயிரில் முடிகின்ற முதல்வேற்று

7 8 MAY 1930

மைச் சொற்களை இரண்டாம்வேற்றுமை விரியென்று எண்ணலாகாது. ஆதலால் மதலை பிறந்தான், பூனை கடிக்கும், தலை சாய்ந்தது, என வரும் இவை போன்றன எழுவாய்த் தொடர்களாதலால் வல்லினம் மிகாது

II. உயிர் அல்லது யகர ரகர ழகர மெய்களை, ஈற்றிலுடைய நிலைமொழி இரண்டாம்வேற்றுமைத் தொகையாயின், வருமொழிமுதலில் வரும் வல்லினம் மிகாது என்று பொதுவாகக் கூறலாம்.

எருது + பிடித்தான் = எருதுபிடித்தான்.
உரை + செப்பினான் = உரைசெப்பினான்.
காடு + சேர்ந்தான் = காடுசேர்ந்தான்.
ஊசி + திருடினான் = ஊசிதிருடினான்.
காய் + தின்றான் = காய்தின்றான்.
ஊர் + கண்டான் = ஊர்கண்டான்.
அகழ் + தோண்டினான் = அகழ்தோண்டினான்

குறிப்பு:—மலைகண்டான், பூனைபிடித்தான், விலைகொடுத்தான், மதலை பெற்றாள், என்பனபோன்ற தொடர்களிலும்,நிலைமொழி இரண்டாம்வேற்றுமைத் தொகையே யாகையால், வல்லின மெய் மிகாது. இவை விரிந்தால், மலையைக் கண்டான், பூனையைப் பிடித்தான், விலையைக் கொடுத்தான், மதலையைப் பெற்றாள் என ஆகும்

இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் வல்லினம் மிகாது என்று முன் கூறியது பொதுவிதி. இதற்கு மாறாக மிகுகின்ற இடங்களும் இருக்கின்றன:—

1. சில சமயம், ஒரு தொடர் எழுவாய்த்தொடரோ, அல்லது இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடரோ என்று மயக்கம் விளைவித்து நிற்கும்படி வரக்கூடும். உதாரணமாக, 'புலி கொன்ற யானை' என நிற்குமாயின், அவ்வாக்கியம், புலியானையைக்கொன்றதென்றும், யானை புலியைக்கொன்றதென்றும் உணர்த்தலாம். முன்னதை உணர்த்துமாயின் அது எழுவாய்த்தொடர்; புலியைக் கொன்ற யானை எனப் பின்னது உணர்த்துமாயின் அது இரண்டாம்வேற்றுமைத்தொகை. இது சந்தர்ப்பத்தைப் பொருந்தியது. சந்தர்ப்பம் இரண்டாம்வேற்றுமைத் தொகைக்கு உரியதாயின் அப்பொழுது புலிக்கொன்ற யானை, என வலி மிகவேண்டும் கொன்றது புலியும் இறந்தது யானையும் ஆயின், புலி எழுவாயாகு மாதலால், புலிகொன்ற யானையென வலி மிகாமல் இயல்பாய்ப் புணரவேண்டும்.

இவ்விதமே, காவலாளர் கண்ட கள்வன், என்னுமிடத்தில் கண்டது காவலாளராயின், அது எழுவாய்த்தொடரும்,காவலாளரைக் கண்டவன் கள்வனாயின், அதுவே இரண்டாம் வேற்றுமைத் தொகையும் ஆகும். இரண்டாம் வேற்றுமையாயின், காவலாளர்க் கண்ட கள்வன், என வல்லினம் மிகுந்து புணரும். இன்ன தன்மையில் சந்தேகம் ஒன்றும் நேரக்கூடாத இடங்களில், பொதுவிதியின்படி, இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது "சீதை பெற்றவன் இவன்" என்றால், இவன் சீதைக்குத் தந்தையாகவும் இருக்கலாம் மைந்தனாகவும்இருக்காலம். தந்தையாயின், 'சீதையைப் பெற்றவன் இவன்' என விரியுமாகையால், "சீதைபெற்றவன் இவன்" என்பது இரண்டாம் வேற்றுமைத்தொகை. ஆனால், சீதைதான் இவனைப் பெற்றாளோ என்று, எழுவாய்த்தொடர் போல் மயங்கச் செய்கின்றதாகையால், இரண்டாம் வேற்றுமைத்தொகையில் "சீதைப்பெற்றவன் இவன்" என் வல்லினம்மிகுந்து புணரவேண்டும். அவ்வாறின்றி "சீதைபெற்ற மகன் இவன்" என்பது வாக்கியமானால் இது எழுவாய்த்தொடரேஎன்பதிற் சிறிதும் சந்தேகமில்லை; ஆகையால் வல்லின மிகாது அப்படியே, "சீதை பெற்றவன் ஜனகன்" என்றாலும் இரண்டாம் வேற்றுமைத் தொகையே இது என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை; ஆகையால் இங்கும் வல்லினம் மிகாது.

ஆகையால், இரண்டாம்வேற்றுமைத் தொகையாகப் பொருள்பட வேண்டிய ஒருதொடர், எழுவாய்த் தொடர்போல் பொருளை மயங்கச்செய்யுமாயின், அத்தொடரில்மாத்திரமே, பொதுவிதிக்கு மாறாக, வல்லினம் மிகும் என்பதை இச் சிறப்புவிதி குறிக்கின்றது.

ஆச்சரிய சூடாமணி

[233-வது பக்கத் தொடர்ச்சி.]

3. மாயாசீதை அங்கம்

ராவணன் தேரிலிருந்து இறங்கி இராம உருவத்துடன் சீதைமுன் செல்லுதல்.

சீதை:—இதோ என்நாதன்! வெற்றியுண்டாகுக.

ராவ:—பெண்ணே, இங்கே! இங்கே! பிடியிடையாளே; மாயையில் வல்ல அரக்கர் நாவின் நடுவிலிருக்கும் உன்னை இலக்குமணன் எவ்வாறு அலக்ஷியஞ் செய்து விட்டுவிட்டுப் போனான். நின்மெல்லிய கால்களால் நீ எவ்வாறு பர்ணசாலையை விட்டு நடந்து வருகிறாய்?

சீதை:—பாவியேன் யான் இகழ்ந்த இலக்குமணன் என்ன நினைக்கின்றானோ?

ராவ:—மாயமானின் குரல்கேட்டு நீ மயங்கினை. அன்றோ?

சீதை:—நாதா, அந்த மாயமான் எங்கே!

ராவ:—மறைந்துபோயிற்று. தானே இனி வரும் பார்.

(திரைக்குள்) இதோ இதோ! வந்தேன்.

சீதை:—என் நாயகனுடைய குரல்போலிருக்கின்றதே! என்னே விது!

ராவ:—முன்னரும் நீ குரலின் ஒற்றுமையால் மிக மயங்கினையென் றெண்ணுகின்றேன்.

சீதை:—ஆம், அதனால் யான் குமரனையும் மிக இகழ்ந்தேன்.

ராவ:—(சாரதியைப் பார்க்கிறான்)

சூதன்:—(இலக்மண உருவெடுத்து ஐயமின்றித் தேருடன் ராவணனிடம் வந்தான்) ஐயனே, அருள் புரிக மனைவியுடன் நீ தேரி லேறவேண்டும்.

ராவ:—இலக்மண, இஃதென்ன?

சூதன்:— ஐய, பரதனுக்குப் பகைவர்பய மேற்பட்டிருக்கின்றதென்று இருடியர் ஞானதிருஷ்டியினால் அறிந்து அவ்விடத்திற்கு நாம் விரைவிற் செல்ல வேண்டுமெனத் தம் தவ வன்மையால் தேரும் உண்டாக்கி என்னிடங் கொடுத்துவிட்டு வானத்தில் மறைந்தனர். சுவாமீ, மனைவியுடன் தேரி லேறவேண்டும்.

சீதை:—இவன் சொல்வது பொருத்தமே முன் கூட இவன் கையில் ஆச்சரியசூடாமணியும், அற்புதக் கணையாழியும் கொடுத்தனர் அம்முனிவர ரல்லரோ!

ராவ:—மாதே, உன் கருத்தென்ன?

சீதை:-பரதனுடைய இடுக்கணைக் காக்கவேண்டுவதும், தாயாரைச் சென்று நாம் வணங்குவதும் யான் இன்றே விழைகின்றேன்.

ராவ:—இலக்மண, நம் சீதையை நீ முதலில் தேரி லேற்று.

சூதன்:—தமது கட்டளைப்படியே! (தேரி லேற்றுகிறான்)

சீதை:—(களிப்புடன் தேரி லேறி) நல்வினைப்பயனால் நாம் அரக்கர் மாயையிலிருந்து தப்பிப்போகின்றோம்.

ராவ:—(ஏறி) இலக்மண! சீதை களிப்புடனிருக்கிறாள்; குதிரையை விரைவாக ஓட்டுக.

சூதன்:—கட்டளை போலவே.

ராவ:—(தனக்குள்) இராமனென்ற நினைவினால் என்னிடம் சீதைக்குச் சந்தேகமில்லையாயினும் இவளைத் தொடுவதற்கோ என் மனம் நேரவில்லை. கண்டவுடன் ஒரு பெண்ணைக் கைதொட்டுப் பயில்வது எளியதோர் கருமமன்று.

சீதை:—வெகு நாளாக நமக்கு அன்புடைய தோழி போல்பழகிய இவ் வனத்தைவிட்டுப் போகவேண்டியதாயிற்று.

ராவ:—இதற்கென்ன! இந்திரனுடைய கற்பக வனத்திலும் அதிசயமான நம் பட்டணத்திலுள்ள பூங்காவனத்தி னழகை நீ பார்க்கப் போகிறாயே!

சீதையின் உருக்கொண்ட சூர்ப்பனகையுடன் இராமன் வருகிறான்.

ராம:— காதலி! அந்தக்கொடிய அரக்கன்மீது யான் எய்த அம்பு பட்டபொழுதே என்போன்றவொரு உருவமெடுத்துக்கொண்டு விழுந்தான். அதன் பிறகு அவனை விடுத்து உன் நிலையை யறிய விரைவில் யான் இங்கு வந்தேன்.

சூர்ப்ப:—காதலி என்பது தங்கள் தீவினைப்பயன்.

சீதை:—(கீழேபார்த்து) அப்படியா! என்கொழுநன்!

ராம:—ஆகாசத்தில் சீதையின் குரல்போல் கேட்கின்றதே (என்று மேலே பார்க்கிறான்)

சூர்ப்ப:—பெரும, தங்களுடையஉருவமும் எனது உருவமும் கண்ணாடியில் தெரிவதுபோலக் காணப்படுகின்றன.

ராம:—உண்மையே! அயலொரு புருடனுடைய ஆளுகையில் சீதையோ இருக்கமாட்டாள்; மாயா சீதை மாயா ராமனிடமே யிருத்தல் கூடும். அது நானில்லையே; அதுபோல அவளும் நீ அல்லள்.

சீதை:—பாவியான எனக்கு உண்மையான கணவன் யாரென்று தெரியவில்லையே!

ராவ:—பேதாய்! முனிவர்களை வஞ்சிக்க என் உருவத்துடன் அநேக அரக்கர் அலைகின்றனர்

சூர்ப்ப:—அது உண்மையே! என் நாயகன் அயல் மாதரொடு ஒரு போதும் உறவுகொள்ளான். எப்படி அவள் நானில்லையோ அப்படியே அவனும் என் கணவனாகான்.

ராவ:—இலக்மண! சீதை தெளிந்து விட்டாள்; விரைவில் குதிரைகளை ஓட்டு.

சூதன்:—கட்டளை போலவே (சீதையைக் கொண்டு ராவணனும் சாரதியும் போயினர்)

சூர்ப்ப:—(தனக்குள்) நான் இனித் தப்பிப்போக உபாய மேதுளது!

ராம:—காதலி செம்பருத்தி மலர்போலச் சிவந்த இதழ்கள் வாடும்படி பெருமூச்சு விடுகின்றாயே? இப்பொழுதும் நின்னிரு ஸ்தனங்களின்மேல் எதற்குக் கண்ணீர் சொரிகின்றாய்; கைகால்களசையாமல் எதற்கு வருந்துகின்றாய். எதையோ நினைத்துக்கொண்டு ஏன் பேசாமலிருக்கிறாய்; உன் மன உறுதியானது, நான் வெளியேறியதுடன் தானும் வெளியேறி விட்டதோ?

சூர்ப்ப:—நாத! தங்களுடைய துன்பத்திற்கெல்லாம் நான் காரணமானேனே என்றுதான்.

ராம:—அன்று அன்று, அற்றன்று! யாரைத்தான் அம்மாயமான் தன்வய மாக்கிக்கொள்ளவில்லை! இலக்மணன் ஏனின்னுந் திரும்பிவந்திலன்.

சூர்ப்ப:—நானும் அதையே நினைக்கிறேன்!

ராம:—அம்மானின் உருவ மாற்றத்தால் குமரனும் மயங்கியிருப்பானென்று நினைக்கிறேன். சீதை, என் பின்வர இயலுமோ நின்னால்? யான் இலக்குமணனைத் தேடவேண்டும்

சூர்ப்ப:—எப்படியேனும் நான் தங்கள்பின் வருவதே நேர். அரக்கர் செய் மாயைக்கு மிக அஞ்சுகின்றேன்.

ராம:—மாதே, இப்படி இப்படி. (இருவரும் சுற்றி நடக்கின்றனர்.)

(திரைக்குள்) ஏ! கைகேயி! உன் எண்ணம் நிறைவேறியது; அம்மா, கோசலாய்! அவ்வரக்கனுடைய அம்பு உன் மகனுடைய மருமத்திற் பட்டு விழுந்தான்.

ராம:—ஐயகோ! இப்படியோ நேர்ந்தது;

(மறுபடியும் திரைக்குள்) உண்மையுரைப்பவளே! தருமவிருப்பமுடையாளே! பூமியின் மகளே! ஏ சீதாய்! கைப்பெண்ணொன்றே இனி யுன்னையும் எண்ணவோ!

ராம உருவத்துடன் கிடந்த மாரீசனுடலிலிருந்து இலக்குமணன் அம்பை உருவுகிறான்.

இலக்ம:— (வருத்தத்துடன்) பெரியோர்சொல் தவறாத எனதருமை அண்ணாவோ, அடியனேன் என்னுயிரைப் பறித்துக் கொள்கின்றீரே!

ராம:—(அருகிற்சென்று புன்சிரிப்புடன்) இலக்மண! மாயையின் அலக்கண் இது அகற்றுவாய். தமையனை என்னைப் பார்.

இலக்ம:—(கோபித்து) அடே, அரக்கா! என் தமையனையுங் கொன்று என்னையும் எதிர்த்தாயா? நில் நில்! எங்கே போகின்றாய்? (உறையிலிருந்து வாளை உருவுகிறான்).

ராம:—பார்! பார் (மோதிரத்தைக் காட்டுகிறான்.) பார். மோதிரத்தினுடைய பயனைப்பார். (மாரீசனைக் காலால் உதைத்தெறிகின்றான். மாரீசன் தன்இயற்கை உருவெடுக்கிறான்)

இலக்ம:—ஐய! நான் பார்க்கிறேன். செந்தாமரை போற் சிவந்த காலால் எற்றியதும் மாரீசன் இயற்கையுருவம்பெற்று மிகமேலே போய் மலைத்தொடர் பொடியாகும்படி மேகவரிசைகளுடன் கீழே விழுகிறான்; பார்க்கிறேன்.

சூர்ப்ப:—(வருத்தத்துடன்) ஐயோ! மனிதர் பலசாலிகளே! மாமனை மாரீசனைக் கொன்றுவிட்டார்களே!

இலக்ம:—இம் மோதிரம் அரக்கரின் மாயையை வெளிப்படுத்து மென்பது இதனாலே நம்புதற்கு உரியதாயிற்று.

சூர்ப்ப:—(தனக்குள்) நான் போவதற்கு உபாயமென்ன? (அழுகிறாள்.)

ராம:—மாதே! என் இன்னு முன் துன்பத்தை விடவில்லை? (என்று கண்ணீர் துடைக்கிறான்)

சூர்ப்ப:—(சுயஉருவ மெடுத்து) ஐயோ! நான் தொலைந்தேன்.

ராம:—இலக்மண, இதென்ன!

இலக்ம:—இதோ, இதோ, இவளுடையது. இவள் கண்கள் கருநெய்தல் மலரைவிட்டுச் சக்கிரவடிவமாயிற்று. மூக்கறுபட்டதால் நுனியும் அடியும் தெரிகின்ற பற்களால் இவளுடைய உடம்பு வெண்டாமரைத் தண்டுகளுடன் கூடின கலங்கின நதியைப் போற் காணப்படுகிறது. ஆ! ஆ! நீயோ இத்துன்பம் விளைவித்தாய் (உறையிலிருந்து வாளையுருவுகின்றான்.)

சூர்ப்ப:—(பயந்து) ஐயா! அடைக்கலம்.

(ராமனுடைய காலில் விழுகிறாள்)

ராம:—சூர்ப்பனகாய், உனக்கு அபயங்கொடுத்திருக்கிறேன், உண்மையனைத்தையும் சொல்.

சூர்ப்ப:—(உருவத்தை மறைத்து) இவ்வாறெல்லாமே!

ராம:—சூர்ப்பனகாய், உனக்கு இவ்வுதவி செய்ததனால் அதற்குப் பதிலாக உன் சகோதரனிடத்திற்கு ஓர் தூதுசென் றுரைப்பாய்!

சூர்ப்ப:—கருணைக்கடலே, அப்படியே!

ராம:—கேள். 'என் கண்முன் ஆசை விளைவிக்கும் மானையும், மாயா சீதையையுங் காட்டி நீ என் வடிவெடுத்து இலக்மணனையும் பொய்யினால் உண்டு' செய்து விரைவாகச் சீதையை வஞ்சித்துக்கொண்டு போனாயே'' என்றால்......

இலக்ம:—சூர்ப்பனகாய், இதையுங்கூட நான் சொன்னதாகச் சொல். சுற்றத்தாரிடத்திலுங்கூட இரப்பது நன்றன்று. பகைவரிடங் கேட்பானேன். அதைச் செய்கின்றேன்; "ஏ! ராவண, போரில் என் முன் நீ சிறிதுநேரம் நிற்கவேண்டும்'' என்று சொல்.

சூர்ப்ப:—என் தமையனுக்கு அது வோர் போர்த் திருவிழா வாகும்.

இலக்ம:—சீ! போ! போ!

சூர்ப்ப:—நான் இதோ வானத்திற் கிளம்பி விட்டேன். (போனாள்)

ராம:—இலக்மண, நம்மை வஞ்சித்துவிட்டனர். பொன்மானெங்கே, பூமியெங்கே, என ஆராயாது கூரிய புத்தியுள்ள ராமனும் பெண்வார்த்தைக்கு இசைந்தானென உலகம் இனிப் பரிகசிக்க இலக்கானேன். கழிந்ததைக் குறித்து வருந்தியென்னபயன்? மதிமழுங்காதிருந்தால் விதி யென்செய்யும்.

இலக்ம:—அண்ண, இப்பொழுதே தாமதியாமல் முயற்சி செய்யவேண்டும்.

ராம:—அப்படியே! முன் போ.

இலக்ம:—கட்டளைப்படியே! இப்படி, இப்படி. (எல்லோரும் போயினர்.)

மாயாசீதை யங்கம் முற்றிற்று.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[231-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour)

நாம் காணும் ஒளியில் பல கதிர்கள் நம்முடைய கண்ணுக்குப் புலனாவதில்லை. அக்கதிர்கள் (X-Ray) நம் தோலையும் தசையையும் குருதியையும் ஊடுருவிச் சென்று உள்ளிருக்கும் பொருளை வெளிக்குக் காட்டுகின்றனவாம். அவ்வாறு காட்டும்போது அவற்றினை நிழலோவியமாகப் பிடித்து விடலாம் (Photograph). இவ்வாறன்றே, நம் எலும்புகள் முறிந்திருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடிக்கின்றனர். மெய்ப்பாடு தோன்றும்போது நம்முள்ளே நடக்கும் மாறுதல்களைக் காணலாகாக் கதிரொளியால் நிழலோவியமாகப் பிடித்துப் பார்க்கலாம். இதோ ஒரு நாய். இக்கதிரொளி உட்புகமுடியாத பொருள் ஒன்றைத் தின்றுகொண்டிருக்கிறது. அதன் இரைப்பை ஒரேவகையாகக் குறுகுவதும் விரிவதுமாக இயங்கித் தீனியைக் கடைகின்றது. அத்தறுவாயில், மற்றொரு நாய் அத்தீனியைக் கௌவ ஓடிவருகின்றது. புதுநாயைக் கண்ட பழைய நாய்க்குச் சினம் பொங்கி எழுகின்றது இரைப்பையின் இயக்கமும் குடரின் இயக்கமும் அடியோடு நின்று விடுகின்றன. நிறைவயிற்றோடு சினந்து நின்றால், உண்டது அறுவதில்லை, உடலில் பிடிப்பதில்லை. உள்ளேயே நின்று விடுகின்றது. குடரியக்கம் குறைந்தபோது குருதி யீரல் வலிந்து திடிக்கின்றது. குருதியோ பொங்கித் தசைநார்களில் சென்று பாய்கின்றது.

ஊற்றுத்தசை யுருளைகளும் செயலுறுகின்றன. ஊற்றுத்தசை யுருளைகள் வீங்குமானால், அதனைக் கழலைக்கட்டி என வழங்குகின்றனர் உலகினர். ஆதலினால், தசையுருளைகளைக் கழலைகள் என வழங்குவோம். இக் கழலைகள் உடலுக்கு வேண்டிய மருந்து

களை உண்டுபண்ணும் மருந்துக் கூடங்களாகும். வருத்தத்தில் கண்ணீர் வாரலையும், நாக்கு வறண்டு போதலையும், புளிப்பம் நின்று போதலையும், காண்கிறோமன்றோ. இவற்றில் சில புறத்துமிழ் நீர்களாய் உடலிற் பாய்வன. எச்சில் புளிப்பம் கண்ணீர் அத்தகையன. புறத்துமிழ்நீர் பாயக் குழைகள் அக்கழலைகளோடு இணைந்து விளங்குகின்றன. சில அகத்துமிழ் நீர்களாய் நேரே குருதிக்குழாயினுள் பாய்ந்து குருதியோடு கலந்துவிடுகின்றன. அகத்துமிழ்நீர் பாய்ச்சும் கழலைகளுக்குக் குழைகள் இல்லை. ஆதலினால் அவற்றைக் குழையிலாக் கழலைகள் எனலாம். (Ductless Glands) அகத்துமிழ் நீரோ (Internal Secretion) அக் கழலைச்சாறுப் குருதியில் கசிகின்றது. பெருநெஞ்சுக்கழலை (Thyroid) மூளையின் இயக்கத்திற்கு இன்றியமையாதது. குண்டிக்காய்க் கழலையோ (Adrenals)—குண்டிக்காயின் அருகே யிருப்பதால் குண்டிக்காய்க்கழலை என வழங்குகின்றோம்.—குருதி ஈரலைத் துடிக்கச் செய்வது. வெகுண்டநிலையில் குண்டிக்காய்க்கழலை தன் சாற்றைக் குருதியிரலில் பாய்ச்சுகின்றது. கருங்குருதிக்குழைகள் (Veins) அழுத்திப் பிழியப்படுகின்றன. அதனால் குருதி விரைந்தோடித் தூயதாகின்றது. சினந்தபோது கல்லீரலும் (Liver) இயங்குகின்றது. கல்லீரலில்தான் கன்னற்குழம்பு (Glucose) கையிருப்பாக உடலில் இருக்கின்றது. தித்திப்புத் தின்னும் குழந்தை மிகுதியும் ஆடி ஓடி விளையாடும் என்று கிழவிகள் சொல்ல நாம் கேட்கவில்லையா? உடலின் இயக்கத்திற்கு இக்கன்னல் (Body Sugar) இன்றியமையாததாகும். உடலியக்கம் மிகுதிப்படும்போது கல்லீரலும் கன்னற்குழம்பைக் குருதியில் நேரே பாய்ச்சுகின்றது. இதனால், களைப்பு எளிதில் வருவதில்லை. நீண்ட பொழுது உழைக்க முடிகின்றது.

புதுநாயைப் பழைய நாய் கண்டதும் நரம்புக் கிளர்ச்சி கழலைகளிலும் சென்று தாக்குகின்றது. ஒவ்வொரு கழலையிலும் நரம்பு முடியக் காண்கிறோம். தாமே இயங்கும் நரம்பமைப்பு இவ்வாறெல்லாம் இயங்குகின்றது. அந் நரம்பமைப்பு மூன்று பிரிவாய் இருப்பதனையும், அவற்றில் ஒரு பிரிவு குடரையும் இரைப்பையையும் இயக்கிவைக்கலாவதும், மற்றொன்று அதனைத் தடுத்துக் குருதியீரல் முதலியவற்றைத் துடிக்கச்செய்வதனையும் முன்னரேகண்டோம். பொருளைத் தின்னும்போது முதற்பிரிவு இயங்குகின்றது. மெய்ப்பாடு கிளர்ந்தெழுந்தபோது இரண்டாம் பிரிவு இயங்குகிறது.

இவ்வியக்கங்களின் பயன் என்ன? ஆற்றல் மிகுதிப்படுதலே யாகும். சினங்கொண்ட நாய் புது நாயின் மேற் பாயும்பொழுது ஆற்றல் மிகுதியும் வேண்டப்படுமன்றோ? தசைநார்களில் குருதி நிறையப் பாய்தல் வேண்டு மன்றோ? களைப்பு எளிதில் வாராமல் இருத்தல் வேண்டும். பகையின்மேற் பாய்ந்து அதனை அப்புறப் படுத்தலே முடிவுநிலை எதிரூன்றலாகும். (End-Reaction). இவ்வுடல் மாற்றமெல்லாம், இம்முடிவு நிலைக்கு முன்னேற்பாடாக நடப்பன; ஆதலினால் இவை பண்ணுறுத்தும் எதிரூன்றல்களாகும். (Preparatory Reactions) சினத்தில் தோன்றுவதுபோலவே, அச்சம் முதலிய மெய்ப்பாடுகள் தோன்றும்போதும், உடலுள்ளே காணக்கிடைக்கும் இயக்கங்கள் பண்ணுறுத்தும் எதிரூன்றல்களாக விளங்குகின்றன.

வேறு சில உடல்மாறுபாடுகள் உள்ளக்குறிப்பினை வெளியிடுதற்குப் பயன்படுகின்றன. அழுகிற குழந்தை தானே பால்குடிக்கும். சிரித்தல், வாய் இதழைப் பிதுக்கிப் பற்களைக் காட்டுதல் கூப்பாடுபோடுதல், அழுதல் முதலியவற்றைக் காண்க. மற்றும் சில பகையை அச்சுறுத்துவனவாக விளங்குகின்றன. சீறி விழுந்து கடிக்கப்போவதை முன்னராகவே அறிவித்து அச்சுறுத்துவதே பல்லைக் காட்டுவதின் பயனாகும். முன்னாளில் பயன்பட்டன பின்னாளில் காணப்படுகின்றன தலையை இருபுறமும் அசைக்கின்றோம்; இளமையில் நாம் விரும்பாதபொருளை நம்மெதிர் யாரேனும் கொணர்ந்தால் தலையை அசைத்து வெறுப்புக்குறிப்பை வெளிப்படுத்தினோம். அவ்வியக்கம் அந்தக்குறிப்பிலேயே முதுமையிலும் காணப்படுகின்றது. நாற்றம் கண்டால் மூக்கைத் தூக்கி முறுக்குகின்றோம். நாற்றத்தை வெறுத்தெழுந்த இவ்வியக்கம் இப்போது பொதுவாக வெறுப்பு நிலையைக் குறிப்பதற்குப் பயன்படுகின்றது.

இவ் வுடல்மாறுபாடுகள் நமக்குப் புலனாகின்றன. இவ்வுடனிலையின் புலனே மெய்ப்பாடு என்பர் ஒரு சாரார். "கரடியைக் காண்கிறோம். அஞ்சுகின்றோம் அவ்வச்சத்தால் ஓடுகின்றோம் - பகைவன் நம்மைப் பழிக்கின்றான். அவன் மேல் சினங்கொள்கின்றோம். அதனால் அவனை அடிக்கின்றோம். கண்ணான கைப்பொருளை இழக்கின்றோம். வருத்தம் மேலிடுகின்றது. அவ் வருத்தத்தால் அழுது புலம்புகின்றோம்" என உலகினர் பேசிக்கொள்கின்றனர். காட்சிப்பொருளின் உணர்வு - அதனாலெழும் உள்ளக்கிளர்ச்சி - அது வெளித்தோன்றும் உடல்மாறுபாடு - என முதலையும் பயனையும் முறைசெய்கின்றோம். ஆனால் ஜேம்ஸ்என்ற பெரியார் இஃதொரு முறை பிறழ்ச்சியே எனக் கூறுகின்றார். "கரடியைக்கண்டு ஓடுகின்றேன். அதனால் அச்சத்தை உணர்கின்றேன்" எனப் பேசுகின்றார். "பொருளை இழந்து அழுகின்றேன். அதனால் வருத்தமுறுகின்றேன்" எனக் காட்டுகின்றார். "பகைவன் பழிக்கவே அவனை அடிக்கின்றேன். அதனால்சினமுறுகின்றேன்" எனத்திருப்பி ஓதுகின்றார். காட்சிப்பொருளின் உணர்வு - அதனால் ஏற்படும் உடல்மாறுபாடு-உடல்மாறுபாட்டின் புலன் என முறைசெய்கின்றார். உடனிலையைப் புலனுறுதலே மெய்ப்பாடு என்பது அவர் முடிவு "நீங்கள் துய்த்த ஒரு மெய்ப்பாட்டை நினைவுகூட்டி உள்நோக்கி நன்கு ஆராயுங்கள். அங்கு எழுந்த உடனிலையின் உணர்ச்சியை அடியோடு மறந்துவிடுங்கள். மிகுதிநிற்பது ஏதேனும் உண்டோ, வென்றி நோக்குங்கள்" என்று ஆராய்ச்சி செய்ய வழிகாட்டுகின்றார். குருதியீரலின் துடிப்பு—மேலாக உயிர்த்தல் - கை கால் வாயிதழ் இவற்றின் நடுக்கம் - தோலில் உட்கூச்சம் - கால்கை விட்டுப்போதல்போல் தோன்றுதல் - வயிறு குழப்பம் - முதலியவற்றை நீக்கிவிட்டால் அச்சம் என்பது என்ன? உடனிலை அல்லது விறல் புலனாதலை நீக்கினால் மெய்ப்பாடே புலனாவதில்லைஎனத்தமது நுகர்ச்சியை வெளியிடுகின்றார்.

உடனிலையே (Organic state) மெய்ப்பாடு என்றால், எல்லாஉடனிலையும் மெய்ப்பாடுஆதல்வேண்டும். பசி முதலியவும் மெய்ப்பாடோ? மன எழுச்சியாக

விளங்கும் மெய்ப்பாட்டிற்கும், உடற்கிளர்ச்சியும் தளர்ச்சியுமாக விளங்கும் வெறும் உடனிலைக்கும் உள்ள வேற்றுமையை நாம் உணர்தல்வேண்டும். காலையில் எழுந்ததும் கை கால்கள் சுறுசுறுப்பாக வேலை செய்ய முந்துகின்றன. நான்கு ஐந்து கல் வரை வெய்யிலில் விடாது நடக்கின்றேன். களைப்பு மேலிடுகின்றது. இந்தக் களைப்பும் சுறுசுறுப்பும் உடனிலைகளாகும். இவை ஒவ்வோர் உறுப்பில் எழுந்து விளங்குவன. நமது தசைநார்களில் ஏற்படும் மாறுபாட்டினால் எழுவன உண்ணிலைபால் தோன்றுவன. ஆனால் மெய்ப்பாடுகளோ ஒவ்வோர் உறுப்பினையன்றி உடல் முழுதினையும் இயக்குவன. ஒரு காட்சிப்பொருளை (Object)காணும் வெளிநிலையால் எழுகின்ற மன எழுச்சிகளாகும். உடல் முழுதும்கூட ஓர் உடனிலையால் மாறக்காண்கிறோம். குளிர்ந்த தண்ணீரில் குளிக்கும்போது ஏற்படும் மாறுபாடுகளைக்காண்க. மெய்ப்பாட்டில் ஓர் உள்ளக்குறிப்பு உண்டு; அது இத்தகைய உடனிலையில் இல்லை.

அன்றியும், உடனிலையும் மெய்ப்பாடும் ஒருங்கே விளங்குவதாலேயே இரண்டையும் ஒன்று என்பது முறையன்று. நெருப்பும் புகையும் ஒருங்கே காணப்படுவதால் இரண்டும் ஒன்றே என்போமா? மெய்ப்பாடு வெறும் புறநிலையன்று. உடனிலைகள் புலனாதலே மெய்ப்பாடன்று. உள்ளக்குறிப்பு வெளித்தோன்றும் புறநிலையே இவ்வுடனிலைகள் என்க. மெய்ப்பாடும் ஒருபுலனே (Sensation) என்றால், மற்றைய புலன் போலன்றோ ஈதும் இருத்தல் வேண்டும். யாரே புலனும் மெய்ப்பாடும் ஒன்று என்பர்? புலனிலோ, (Sensation)முழுஉயிருளியும் எதிரூன்றுவதில்லை. மெய்ப்பாட்டிலோ முழுஉயிருளியும் ஒருமுகப்பட்டு எதிரூன்றுகிறது. உடனிலைகளைப் புலனுறுவதோடு நில்லாது அவற்றை ஒற்றுமைக்காட்சியால் ஒன்றாகஉணர்கின்றோம். ஈது அக நிலைச்செயலாகும்; நடத்தையோகும் ஜேம்ஸ் என்பவர் சொல்வதுபோல மெய்ப்பாடு, வெறும் மடக்கு அன்று. உள்ளக்குறிப்பினை நாம் மறத்தலாகாது. கூட்டில் அடைபட்ட கரடியைக் கண்டால் பழத்தைக் காட்டுகின்றோம், ஊட்டுகின்றோம். அடைபடாத கரடியைக்கண்டால் முதுகைக் காட்டுகின்றோம், ஓடுகின்றோம். இம்மாறுதல் எதனால் உண்டாயிற்று. அகநிலையால்உண்டாயதன்றோ? குருதிஈரல் துடித்தல் முதலிய சில உடனிலைகள் அச்சம் எழும்போதும் தோன்றுகின்றன; சினம் தோன்றும்போதும் எழுகின்றன. வெகுண்டோடுவதும் வெருவியோடுவதும் புறநிலையாகிய உடனிலைவகையால்ஒன்றுனால்இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமைதான் என்ன! அவ் வேற்றுமை அகநிலையாகிய உள்ளக்குறிப்பைப் பொறுத்ததன்றோ! எனவே, உள்ளக்குறிப்பும் இன்றியமையாது வேண்டப்படுவதேயாம். அது வெளித்தோன்றுவது உடனிலைகளால் என்க. உடனிலையின் இன்றியமையாமையை ஜேம்ஸ் என்பார் விளக்கிவைத்தமைபற்றி அவருக் கிவ்வுலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

189097

இலஞ்சிப் பாவை.

[234-வது பக்கத் தொடர்ச்சி]

10. இராதாகிருஷ்ணன் தளர்ச்சி.

ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ?

சம்பர்.

அன்றுமாலையில் இராதாகிருஷ்ணன் ஏவிய சாரணர் குன்றும் காடுங் கடந்துசென்று மாறுவேடம் பூண்டு மன்னனது நாட்டில் நுழைந்தும், மாற்றலர் உறையும் பல குடிக்காடுகளைக் குறுகியும், கண்டனவற்றைக் கருத்திலமைத்துத் திரும்பிவந்து நாடெங்கும் அமைதியுற் றிருந்ததென்றும், ஓரிடத்தும் போரிற்குரிய முயற்சிகள் நேரவில்லை யென்றும் தலைவனிடம் தெரிவித்தனர். வேற்றூரில் போருக்கம் மீக்கூர்ந்த வீரரொடு புரவியும் படைதிரண்டு புடைபெயர யாரும் பார்த்ததில்லையெனின், மன்னன்றன் வளநாட்டில் கவின்பெற விரித்த கத்திகை படர்ந்தாடிக் கண்டோர் மனதைக்கவர்ந்து காளைபக்கிளர்ச்சியைப் புகுத்தவில்லையேல், இரவில் அயர்ந்தெவரும் பகைவர்க் கிரை யாகாவண்ணம் மூட்டிய தீ, மலைகளினின்றொளிர்ந்து மனிதரை அச்சமுறுத்தி விலங்குகளையும் பறவைகளையும் விலக்கவில்லை யாகில், இராதாகிருஷ்ணன் மட்டும் அமைதி யற்றவனாய், கவலையுற்ற முகத்துடன் மேற்றிசைநோக்கி நின்றதேன்?

சொற்றிறப்பாப் பான்மையனாய ஸ்ரீபாலன், இராதாகிருஷ்ணனது இல்லினை நீத்து, குறவரும் மருளும் குன்றமொன்றடைந்து, அதன் பாங்கர்க் கண்டவரஞ்சிக் கண்புதைக்கும் பேழ்வாய்ப் பிலம்புக் குறையலாறன் நாட்டினின்று துரத்தப்பட்ட வல்வினையாளர் கூடி உறைவதற்கேற்ற தவ்விடம். பிறங்கலின் வயிறு கீண்டிப் பிளந்த புழையில், புலிநடுக்குற்ற நாள் வரை குலுங்கலால் வழுவித்தகர்ந்துருண்ட கற்பாறைகள் தடைபட்டுத் தங்கியவையே அக்குகைக்குக் காரணமாயின. தேக்கும், பலாவும், கோங்கும் எங்கெங்குந் தழைத்து மூடலால் அவ்விடத்தில் நடுப்பகலும் நள்ளிரவுபோல் பேரிருளிற் புதைந்திருக்கும். மக்கள் தம் மதியினுங் கெட்டாது இருண்டுநிற்கும் எதிர்காலம்,மும்மையுமுணரவல்ல முனிவர்தம் ஞானமென்னும் கிரணம் பாய, அவிரொளி பரப்பி அவர் விழிக்கொருநொடி தெளிந்து தோன்றல்போல், குவிந்தகிளைகள் ஒருகால் காற்றில் அசையுமேல், வெயிலிழையொன்றிரண் டுண்ணுழைந்து எல்லியில் நிலவெறிந்தாங்கு ஒருகண மதைத் தெளிவிக்கும். ஓசையற்ற அவ்வடவியில் ஊற்றுப் பெருக்கால் ஓடும் ஓடையின் சிற்றொலியொழிய வேறொ ரிமிழ்த்த லில்லை. பெருங்காற்று வீசலால் ஏரியின் மீதெழும் திரைகள், பாறை

யின்மீது மோதலால் சேணிடைப் பிறக்குந் தமரம் ஓரொருகால் அவ்விடம் கேட்பதும் உண்டு. அதன் மேற் கவிந்தபாறைகள் உறங்குங் களிறெனத் தோன் றும். அம்முழையே ஓநாய்களுக்குப் பிறப்பிடம். பெண்சிங்கங்கள் கருவுயிர்த்தலு மாங்கே. வீரரும் உள்புக வெருவும் வைப்பது பேய்களுக் குறைவிட மெனக் கொள்ளப்பட்டது. ஊர்க்குடிகள் ஆணும் பெண்ணும் நண்ண அஞ்சும் அக்குகையே இக்காலம் ஸ்ரீபாலருக்குப் புகலிடமாயிற்று. அதன்பா லணுகச் சுதஞ்சனை நடுங்கினளேனும், தந்தையின் பாதுகாவ லுக்கது இன்றியமையாததென அறிந்த அம்மூதறி வாட்டி, தன் னச்சத்தைப் புறத்தே காட்டாது புன் னகையே காட்டித் தாதையுடன் அப்பிலத்தினுள் குடிபுக நேர்ந்தாள்.

உலார் ஏரிக்கரையில் அந்நாள் அந்தி வந்தடையும் வேளை இலுப்பைத்தோப்பை நாடி இராதாகிருஷ் ணன் சென்றுகொண் டிருந்தான். விலங்கும் பறவை யும் அவையவை வைகுமிடஞ் சேர, வனமெங்கும் அரவ மடங்கி யிருந்தது. வாவல் தன் தோற்சிறகை விரித்துச்சென் றுவிசும்பிடை அரற்றுஞ் சிறுகுரலும், தும்பிகள் குழுமிச் சுழலுமொலியும், மேலெழும் பியும் கீழிறங்கியும் கருவண்டுகள் வழிப்போக்கர்மீது பாய்ந்து ஓம்மென முரலும் ஓசையுமே அவ்வனத் திடை யெங்கும்பம்பின. மெய்க்காவலாளர் சிலர் தலை வனைப் புடைசூழ்ந்தனர்; முன்சென்று அம்பியை ஆயத்தஞ் செய்தனர் சிலர். அங்ஙனம் அவரவர் தத் தமக்குரிய பணிகளை அணிபெறச் செய்தனரேனும் தலைவனோ முன்சொன்ன முழைப்புறத்தேயே தங்கி யிருந்தான். இதுவரைத் தன்வேலையி லவன் தாழ்த்த தில்லையாதலின், இதன்காரண மென்னென ஒருவரை யொருவர் வினவினர்.

முதற் சேவகன்:—நம் நாயகன் மனதில் ஏதோ புகுந்துகொண் டிருக்கின்றது.

இரண்டாம் சேவகன்:—ஆம், தெரியவில்லையா? யாரை விட்டது துக்கம்.

மூன்றும் சேவகன்:-என்ன,என்ன விசேடம்! நான் இரண்டு நாளாய் ஊரிலில்லை. ஏதாவது நடந்ததோ?

இரண்:—ஆம் நடந்தது. நமது தலைவனும் மால் வண்ணனும் சண்டையிட்டுக்கொண்டனர்.

மூன்:—எதற்காக?

இரண்:—எதற்காகவா? ஒரு வீட்டில் அண்ணன் தம்பிகள் இருவர்; அவர் தகப்பன் ஒரு தீங்கனியைக் கொணர்ந்து அதைப்பகிர்ந்து ஒருவறக்குக் கொடுக்க வேண்டுமானால் யாருக்குக் கொடுப்பது—மூத்தவ னுக்கோ இளையவனுக்கோ!

மூன்:—அடே! என்ன ஐயா? நான் எதற்காகச் சண்டையிட்டுக்கொண்டார்க ளென்றால் ஏதேதோ பிதற்றுகின்றாய்.

இரண்:—அதைத்தான் சொல்லவருகிறேன். நான் கேட்ட கேள்விக்கு விடைசொல்ல வில்லையே நீ.

மூன்:—சே-மூத்தவனுக்குத்தான் கொடுக்க வேண் டும்.

இரண்:—ஏன்? இளையவன் மூத்தவனைவிட நற் குணம் படைத்தவனாய், நல்வினைக்க முடையவனாய், கற்றறிந்தவனாய், நல்லெழில் பெற்றவனாயிருந்தாலோ?

முதல்:—குணந்தான் பெரிது. நான் இளையவனுக் கே கொடுப்பேன்.

இரண்:—இங்கும் அப்படியேதா னாயிற்று. தகப் பனுக்கு,இளையவனுக்கே கொடுக்கவேண்டு மென்கிற எண்ணம். ஆனால் மூத்தவனது வன்மைக்கும் கொடு மைக்கும் அஞ்சி ஒருவருக்கும் கொடாமல் கனியை எடுத்துக் கனியிற் சென்று விட்டான்.

முதல்:—ஓகோ! தெரிகிறது! தெரிகிறது!!

மூன்:—என்ன ஐயா, நீர் விடுகதை பேசுகின்றீர். இவரும் கூடவே சேர்ந்துகொண்டார். விஷயத்தை விளங்கச் சொல்லக்கூடாதோ?

இரண்:—உனக்குத் தாயொருத்தி யிருக்கிறாளா?

முதல்:—அல்லது மனைவி யிருக்கிறாளா?

இரண்:—அல்லது வயதுவந்த மக்கள் இருக்கின் றார்களா?

மூன்:—ஏனிக் கேள்விக ளெல்லாம்?

முதல்:—இவர்களில் ஒருவர் இந்த விடுகதைக்கு விடைபகர்வார்கள்; போம்.

ஏரியிடைக் கூடிய பரிவாரத்தினரெல்லாம் தலை வனது வருகையை எதிர்பார்த்து நின்றனர். கீழ் நின்ற அவர்களது கூட்டத்தை அடுத்துள்ள மலைகளி னின்றும் காணப் பெரிதும் களிப்பளிக்கும் வலிமை யும் உயர்ச்சியும் இறுமாந்த நடையும் மலைநாட்டு வீர ருக்கன்றி மற்றவருக்குண்டோ? அன்னார் தலைவனோ தம்பியனைச் சுதஞ்சனை யுறையும் குகையை நோக்கி நெடுநேரம் நின்றிருந்தான். அன்று காலையிற்றான் இனி அவள்முகத்தையும் காண்பதில்லை யென்று உறுதிசெய் திருந்தானேனும், ஊர் விடுத்தும் போர் தொடுத்தும் அவளை யகல அவன் நினைத்தது மறி பாமையே. ஆற்றுவெள்ளத்தை மணல்கொண் டணை கோலுவாரும்,உருத்தெழு தீயை உமிகொண் டணைப் பாரும், பிரிவிலும் செருவிலும் பொங்குகாதலை யவிப் பாரும், செய்கையில் தம்முறொப்பர். காலையொழிய மாலையில் சுதஞ்சனை வைகிய குகையை வட்டமிட் டிருந்த இராதாகிருஷ்ணன் புதையல்காக்கும் பூத மொத்தான் கண்ணிற் காணுவிடினும் அவள் குதலை தான் காதுக்கு எட்டாதோ? காற்றிலசைந்து சல சலத்து ஓவென் றொலிக்குமிம் மரங்களும் இடிவிழுந் தின்றே யுடையாவோ! என்றென்று நைவான் இராதா கிருஷ்ணனது பொறுமையும் வீண்போகவில்லை. யா ழின் இன்னிசையும், அதனோ டிழைந்தவொரு மென் குரலும் காமுடைமனத்தன் காதுகளுக் கெட்டின.

இமயவரை தனிலந்நாள் கன்னிகையா
யிருந்தவஞ்செ யிரவிச் செல்வீ
சமயமிதே நலந்தனைக் கன்னியென்பாற்
செயவிழைதற் கென்று தாழ்ந்து
தமதிருதாட் காய்பூண்டேன் வெம்புலிகள்
தருக்கிவளர் தனிமைக் காட்டி
லெமைப்புரத்தற் குமையன்றி யேற்றவர்வே
றுருளரென் னருமைத் தாயே! 1

இறுமாந்த வுனதைய னியற்றுவேள்விக்
குனையழையா தொழித்து விடலுஞ்
சிறுமையினுற் சினமிகவெஞ் சிவபெருமான்
சிரித்திடுமவ் வளவிற் றுனே
பொறுத்தாட்கொ ளெனவிரந்து புகழடைந்தா
யெனதுயிர்போற் றளருந் தாதைக்
குறுதீங்கை யுனையன்றி யொழிப்பவர்வே
றுருளரென் னருமைத் தாயே! 2

வளமனைகள் பெருஞ்செல்வ மிவைதுறந்தே
வனமதனிற் றிரியும் யாங்கள்
தளர்வடைய வலர்மொழிகள் தகுதியிலார்
பிதற்றிடினு மவற்றை யொன்றுங்
களங்கமிலா வதனத்தாய்! கழிகருணை
பொழிந்திடினீ கருத்தி லென்னோ
முளவெமது குறைதீரா யுனையலது
புகலெவரெம் மருமைத் தாயே! 3

பண்ணுடைப் பாட்டு முடிந்ததேனும், நிலனூன் றிய வாளின்மேல் முகத்தை யிருத்திநின்ற வீரன் தலை நிமிர்ந்திலன். ஊழியனொருவ னிருமுறை யிருமிச் சாயுங் கதிரவனைக் காட்டியபின், நிமிர்ந்து நின்று தன் னுடையை நேராக உடுத்திக்கொண்டே "இது தான் கடைமுறை! இதுதா னிறுதிமுறை! இன்னு மோர்முறை இத்தீங்குரல் என் காதில் விழப்போவ தில்லை" என்று சொல்லிச்சொல்லி நெட்டுயிர்த்து நடக்கலுற்றான்.

அவ்வெண்ணம் மனமெனு மத்தயானையை ஒல்லை உய்க்குமொரு மங்குச மாயது. ஆகவே, மலைப்புறத்தே விசைகொடு நடந்தன அவன் கால்கள். மொழியொன் றும் புகலமாட்டாத வீரனை, ஆண்மையுஞ் செருக்கு மொருகண மகன்ற வண்ணலை, தாழ்மையும் துன்ப முந் தன்னகங்கொண்ட தலைவனை,ஓடத்தின்மீதேற்றி உகைத்தனர் உண்மை யன்புடை மெய்க்காவலாளர். ஓடப்பாட்டும் அவன் மனதிற் கோய்வு தந்திலது. இலஞ்சியும் "சஞ்சரத்திரைக் கரங்களா லெடுத் தசை யவே தாலாட்டியும்" அமைந்தில தவன் மனம். மறு கரையி லிறங்கிக் கீழ்த்திசை நோக்கி நடந்து உவரிபுக் கொடுங்கிய சுடரோன் செங்கதிர்க ளெழுமுன்னர் இலுப்பைத்தோப்பை யனைவரும் அடைந்தனர்.

பல்வித நினைவுகளுக்கிடையே முழுகினராய் அவ் விடம் குழுமியிருந்த வீரர்களிற் சிலர் தரையி லமர்ந் தும் சிலர் நின்றுகொண்டு மிருந்தனர். உற்று றுறவின ரைப் பிரிந்ததா லெழுந்த எண்ணங்களை ஒழிக்கமாட் டாது, ஓரிடத்தில் நிலையாம லிங்குமங்குந் திரிந்து அலைந்தவர், உலகுறு பாசம் வீசாது மெய்பிரிந்து உம்பர்செல். உயிரினை யொத்தார். கம்பளம் போர்த்து உறங்கிக்கிடந்த பெரும்பாலார் தொகுதி, அடுத்து வளர்ந்த நாணல்களின் நிறத்துடனொன்றி, பாகுபாடு செய்தற் கியலாதிருந்தது. பசும்புற்றரையில் இங்கு மங்கும் தோன்றிய வாள்களின் நுனிகள் மின்மினி பேய்த்தன. தலைவனைக் காணலும் அனைவருமெழுந்து ஆர்ப்பரித்து வெற்றிமுழக்கஞ் செய்தபின்னர் அமை யுற்றதச் சூழல்.

சாரணர் - வேவுகாரர். மாற்றலர் - பகைவர். கத்திகை - துகிற்கொடி. காளையம் - போர். பிறங்கல் - மலை. எல்லி - இரவு, இருள். இமிழ்த்தல் - சப்தம். தமரம் - ஒலி. வாவல் - வௌவால். முரலும் - ஒலிக்கும். அம்பி - படகு. கனி - பழம், பிலம். பிரிவிலும் செருவிலும் பொங்கு காதலை அவிப்பாரும் - காதலியைவிட்டுப் பிரிந்துபோகியும், போர் முதலிய கருமங்களை மேற்கொண்டும் அவளுடைய நினை வை மறந்து காதலை ஒழிக்க முயல்கின்றவர். காழ் உடை - வயிரம் பாய்ந்த, அல்லது, வலிமை மிகுந்த. இரவி - மலை. அலர் - பழிமொழி. ஒல்லை-சீக்கிரம். சஞ்சரம் - அலைதல். உவரி - கடல். உம்பர் - மேலுலகம். ஏய்த்தன - ஒத்தன. சூழல் - இடம்.

கம்பராமயாணம்

அயோத்தியா காண்டம்.

1. மந்திரப் படலம்.

[228 வது பக்கத் தொடர்ச்சி]

யாவதோ நின்கருத்து நம்பிநீ யியம்புகென்றான்.

வாலியை இராமன் மறைந்திருந்து மாய்த்தன னென்னும் வரலாற்றளவில் கம்பர் வான்மீகத்தி னின்று விலக நினைத்திலரேனும், அதன் பயனையோ முற்றிலும் மாற்றிக்கொண்டனர். நீதியோ வீதென வாதித்தவாலியை முன் முறையலாவில்லால் படுத்தது போன்றே பின் சொல்லானும் ஒடுக்கமுயன்று, வல் லான் வகுத்ததே வாய்க்காலெனும் பெருவழக்கிற் கிழுக்கின்றி வடமொழி முதநூலில் பலபடப் பேசி னான் இராமன். ஒருதலையாய்ச் சொல்லுந் திறத்தினை வள்ளுவர் பாராட்டினரெனப் பரிமேலழகர் வகுத்த வவ் வுரைக்கிணங்கிய வெற்றியொன் றுளதாயின், இராமனை அங்கு வென்றன னென்ன வேண்டும். "அரசுமுறைப்படி நான், தீயனாகிய உன்னைக் கொன் றேன். தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளாதவர்களையும் மன்னிக்கப் பெறாதவர்களையும் கொன்று விடும்படி மனுநூல் கூறுகின்றது; ஆகையால் கொன்றேன். நீ குரங்காதலால் உன்னை யான் வேட்டையாடினேன். சுக்ரீவனைக் காப்பதாக யான் வாக்களித்திருந்ததால் உன்னைக் கொன்றேன்," என்று இன்னபடி முன்னுக் குப் பின் முரண்பட இராமன் கிளத்ததெல்லாம் வாலிக்கங்கு முறையேயெனக் கொளத்தக்க வாயின. இராமனது அம்பிற்கும்வம்பிற்கும் வாலியையொருங்கே இலக்காக்கினர் வான்மீகிமுனிவர். முறையல சிலபுகு தலு மன்னறத்திற் கியற்கையே என வீடுமன் முதலா னோர் விளம்பியுள தொன்னெறி யுறைந்த சிந்தைய னை வாலி அது மறந்து தன் பிள்ளைமதியால் நொந்த னன் எனப் பரிந்து, செய்யத்தகுவதே இராமன் செய்தனன் என்று வாகையைத் தந்தனன். ஒளியம் பெய்புஞ் சூழ்ச்சியு மொக்கு மெனச் சார்பறத்தால் சாதிக்கப் பெற்றது.

முதலறத்தில்மூழ்கியுள சிந்தையராய கம்பர்பிரான் பொதுமுறையில் இச்செயல் மனிதருக்கு அடுக்கா தென்று நினைக்கும் நீர்மையர். ஆதலின் இராமன் தன் கருமம் நேரிதென்று எவ்வகையில் அமைதி காட்ட முயலினும் அது அவனுக்கு இயலாததாமாறு வாலி யின் வாயினால் விளக்கிவைத்தார். எனின், மாறுடர்க் குரிய முதலறத்தைப்பற்றி வாதித்தால் இராமன் தோற்கவேண்டுமென்பது இன்றியமையாத தாயிற்று. இத்தோல்வி தோன்றிய அருமையைக் காணற்கு, "வெவ்விய புளினரென்ன விலங்கியே மறைந்து வில் லால், எவ்வியதென்ன, செவ்வியோய் உரை நீ" என்ற

விக் குரக்கினத்தரசன் கேள்விக்கு விடையின்றி இராமன் வாய்ப்பூட்டிட்டுநின்றது மொருசான்ருகும். நிலமே நோக்கினுனே, மற்றுச் சேணிடைநெடியதோர் நோக்கெறிந்து நின்றனனே இராமன் அறிகிலோம். உடுக்கையிழந்தவன் கைபோல்இடுக்கண்களைந்துதன் தமையனைக் காப்பதற் குடன்வந்த இளையகாளையே இச்சொற்போரிலும் வாயம்பற்று நின்றவத் தயரதன் மதலைக்குத் துணைபுரிய விரைவானுகி,

முன்புநின் றம்பிவந்து சரண்புக முறையிலோயைத்
தென்புலத் துய்ப்பனென்று செப்பினன் செருவினீயு
மன்பினை யுயிருக்காகி யடைக்கலம் யானுமென்றி
யென்பது கருதியண்ணன் மறைந்துநின் றெய்த
[தென்றான்.

[''முன்னரே உன் தம்பிவந்து சரணமடைந்ததால், நன்னெறிசெல்லா வுன்னை எமனுலகு செலுத்துவேன் என்று அவனுக்கு வாக்களித்துவிட்டான். பிறகு,உன்னோடு போர் செய்ய எதிர்வந்தால் உன் உயிர்மேல் இருக்கும் ஆசையால் நீயும் வந்து அடைக்கலம் புகுவாயாயின், (சரண் புகுந்தவரைக் கொல்லலாகாது; சுக்ரீவனுக்குக் கொடுத்தவாக்கும் பொய்க்கலாகாது) பின் என்னசெய்வது என்று கருதி என் தமையனான இராமன் மறைந்துநின்று உன்மீது பாணம் எவினன்,'' என்று விடையளித்தான்.]

இலக்குமணனது ''கட்டுரையே'' அன்றித் தகவுடைக் காரணமொன் றன்றிது.தன்தமையன் நெடுமுடி புனைதற்கு இடையூறுண்டெனக் கண்ட இவ்விளவல், ''மதிக்கும் மதியாய் முதல் வானவர்க்கும் வலீஇதாம் விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி'' யென அயோத்தியில் வெகுண்டநாள், ''வாய் தந்தன கூறுதியோ'' என்று இராமன் கடிந்த வாசகம்,இங்கு இவ்வடவியில் இலக்குமணன் வாலிக்குரைத்த மறுமொழிக்கே பெரிதும் பொருத்தமுடையதாகும். வாய்தந்ததன்றி மதியின் வகைவந்த கூற்றென் றிதனைக் கொள்வதற்கில்லை. ''அறிவும் தொழிலுங்கொண்டென்னை அளந்துநீ விலங்கென்று மதித்ததில்லையாயின் எதிர்வரா தெய்தல் நீதியோ''என்றதற்கு, ''அது நீதியோ அன்றோ ஆகுமாறுகுக; உன்னைக் கொல்வானென் றெனதண்ணன் முன்சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்குப் பிறழலாவதும் நீதியாகாது. நீயும் அடைக்கலம்புகின் அவ் வாக்கினை நிறைவேற்ற இயலாமற் போய்விடுமன்றோ'' எனச் செப்பவேண்டிய நிலைக்கு வந்துவிட்ட விது கடலுள் மூழ்குவோன் துரும்புபற்றித் துளும்புமோர் கையறுநிலையையே காட்டிநிற்கும்.

இவ்வுரையன்றி இலக்குவன் வேறொன்று மிங்கு இயம்புதற்கில்லை. ''நீதியும் முறையும் ஓர்ந்துதான் தீயரை யொறுக்கவேண்டுமோ.தம்பியின் இன்னுயிர்த் தேவியைத் தழுவினன் ஒரு கயவனை மறைந்து கொன்றுலென், எதிர்த்து வென்றுலென்; யாதுந் தக்கதே'' என்று கழிவதோ இவ்வயின் இயலாத தாயிற்று. ஏனெனில், ''ஆயின், நின் மனையைக் கவர்ந்தகன்ற அவ்வரக்கச் சோரனை மறைந்தொளிந்தோ,நேர்நின்று பொருதோ நாளை நீர் மாய்க்கப்போவது'' என வாய்வல்ல வாலி உடனே எதிர் வினவாது நிரான். ஆதலின், முன்புத்தியா லிதனை இலக்குவன் மொழியாதொழிந்தனன்.

''இன்று போய்ப் போர்க்கு நாளைவா'' என்று தோற்றுநின்ற இராவணனைக் கொல்லாது இவர் பின்போக்குதற்கிருப்பதும் வாலியின் கேள்வியின் வாய்மையை வெளிப்படுத்தும்.

கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா
யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய்
கருமந்தா னிதன்மே லுண்டோ

[துணையொருவரையும் வேண்டாத வெற்றியுடைய இராமனே, உன்னைப்பெற்ற தயரதன் உனக்குச் சேர்த்த செல்வத்தை அப்பொழுதே உன் தம்பியாகிய பரதனுக்குக் கொடுத்துவிட்டு நாட்டிலே ஒரு கருமம் செய்தாய். அவ்விதமே, தமையனான எனது அரசை எடுத்து என் தம்பிக்குக்கொடுத்து இக்காட்டிலும் ஒரு கருமம் செய்தாய். இவ்விதமாகத் தம்பிக்கு அரசுகொடுக்கும் காரியம் இதன்மேல் இன்னும் ஏதாவது செய்ய நினைத்திருக்கின்றாயோ]

என்றிங்கு வினவியது, பின் இராவணனைக்கொன்று விடணனுக்கு இலங்கையை வழங்கலாவதை வருவதுதெரிந்துணர்ந்த மாற்றம்போல் தோன்றுகின்றதாதலால், தாரணி மௌலிபத்தும் சங்கரன் கொடுத்தவாளும் வீரமுங் களத்தே போட்டு வெறுங்கையோடிருக்குமாறு தானே பொருதழித்த அரக்கனையும் எளிதிற் கொல்லாது, அவன் தன்பிழைகளைத் தெரிந்திரங்கி நல்வழிப்படுதற்குக் காலஞ் சிறிதளிப்பான் இராமனென்று தேர்தற் குரியவன் வாலியெனத் துணிவதும் ஒக்கும்.

ஆதலின், கொடியோரைக் கோறற்குக் கோலளவு நோக்கவேண்டா வெனவிளம்பினு லிங்கது பிழைபட நிற்குமெனத் தேர்ந்த இலக்குமணன் வேறோர் வகையில் வாலிக் குத்தரம் அறையநினைத்து முன்னரே தஞ்சம் புகுந்த சுக்ரீவனுக்கு இராமன் வாய்வழங்கியிருப்பதை வகுத்தனன். இருதலையும் ஆய்தலின்றி ஒருவனுரையை விரைவிற்கொண்டு அயலானொருவன் தலையை அறுத்திடுவன் என வாக்களித்தல் அறிவும் நீதியும் ஆமெனினன்றோ அவ்வாக்கினைக் காப்பதும், காப்பதற்குக் கையாண்ட இம்முறையும், நீதியென நினைத்தற் குரியனவாகும். எக்குற்றஞ் செய்தோனும் கழிவிரக்கம் கைம்மிக அதனை யொழித்து நல்வழிப்படுவதற்குச் செவ்வியொன்று பெற்றபின்பும் முன்னைய புன்மையிலேயே ஒழுகினலன்றி அவன் பொன்றுதற் குரியவனுகான். இராவணனுக்குமே இராமன் இச் செவ்வியை அளித்தனன் என்றால், வாலியின் வாய்ச்சொல் கேளாமுன்னும், நற்புத்தி புகட்டி யொருசால் பாராமுன்னம், அவனைக் கொல்வனெனச் சுக்ரீவனுக்கு வாக்களித்ததை மதியென்றோ, அல்லது அம்மநுவே வகுத்த நெறியென்றோ நினைத்தற் கொண்ணுமோ. மற்று, இக்காரணம் வாலியை மருட்டிவிட வகைவந்த வித்தையேயன்றி இலக்குமணனே நேரென்று நம்பிய தொன்றுமன்று. வாலியும் அவன் பின்னவனுங் கடும்போர் புரியுங்காலை ஒளியிடமிருந்த இராமன் வாலியின் உருவையும் திறலையும் வியந்து இலக்குமணனிடங் கூறலும், அதற்கு

வள்ளற் கிளையான் பகர்வானிவன் றம்முன் வாணாள்
கொள்ளக் கொடுங்கூற் றவனைக் கொணர்ந் தான்கு
[ரங்கி
னெள்ளற் கரும்போ ரதுசெய்கல னென்னு மின்ன
லுள்ளத்தி னூன்ற வுணர்வுற்றில னென்று மென்
[றான்

[இராமனுக்கு இளையவனுகிய இலக்குமணன் விடை கூறுபவனுகி, ''இந்தச் சுக்ரீவன், தன் தமையனுடைய வாழ்நாளைக் கொள்வதற்குக் கொடிய யமனை உன்னை அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றான். குரங்குகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொள்ளும் தரமற்ற செய்கையன்று இவன் செய்வது, என்னும் துன்பம் என் மனத்தின்கண் அழுந்தலால், இங்கு நடப்பதொன்றும் என்னால் உணர இயலவில்லை'' என்றான்]

ஆற்றா தியின்னும் பகர்வானறந் தாற முங்கத்
தேற்றுது செய்வார் களைத்தேறுதல் செவ்வி தன்றான்
மாற்று னெனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்றான்
வேற்றார் கடிறத் திவன்றஞ்சமென் வீர வென்றான்

[அவ் விலக்குமணன் மனம்பொறுது மேலும் சொல்வானுகி, ''வீரனே, தம் அறியாமையால் தருமநெறி கெடும்படி செய்பவர்களைக் குற்றவாளிகள் எனக்கொள்வது தக்கதன்று. அதுவுமன்றி, பகைவன் என்று தன் தமையனைக் கொல்வதற்குத்துணிந்த இவன் மற்றவர்கள்திறத்தில் தஞ்சமடைவதை என்னவென்று பாராட்டுவது, என்றான்]

ஆதலின் சுமித்திரை புதல்வன், சுக்ரீவன் சரண் புகுந்ததும், அதற்கிணங்கி இராமன் வாலியை வதைக்கவந்து நிற்பதும் யாவையும் வெறுத்தனன் என்னல் வெளிப்படை. வாலிக் கிதனை ஆதாரமாக வுரைத்ததும் வம்பென்பதற்கு வேறென் வேண்டும். இவ்வாறு தன்செயலை வெறுத்துரைத்த தம்பிக்கு,

அத்தா விதுகே ளெனவாரியன் கூறு வானிப்
பித்தா யவிலங் கினொழுக்கினைப் பேச லாமோ
வெத்தா யர்வ யிற்றினும்பின்பிறந் தார்க ளெல்லா
மொத்தாற் பரதன் பெரிதுத்தம னுத லுண்டோ

[''அப்பா இலக்குமணு, இது கேள். பைத்தியம் பிடித்த இம்மிருகங்களின் ஒழுக்கத்தை ஒரு பொருளாகவைத்துப் பேசலாமோ — அதுவுமன்றி எந்தத் தாயார் வயிற்றினும் பின்பிறந்தவர்களெல்லாரும் தம் தமையன்மார்களோடு ஒத்து வாழ்ந்தால், அப்புறம் பரதனைப் பெரிய உத்தமன் என்று சொல்வதற்கு வகையுண்டோ, என்று சிறந்தவனுகிய இராமன் கூறினன்]

இராம னிவ்வாறு இயம்பிய மாற்றத்திலிருந்து, வாலியைக் குரங்கென்றே யவன் கொண்டதாகக் கூறியது வாய்மையாயின், பின்''உன்னை விலங்கென்று கொள்ளலாமோ; செய்கையால் மனத்தினால் நீ மனிதனே யாவாய்; ஆதலின் மனித ஒழுக்கத்தில் நீ பிழைத்தாயென்று கொன்றேன்'' என விளம்பியது பொய்யேயென்று புகலத் துணியாதாரும், பின்புத்தியென்றேனுங் கொள்ளல் கடனுகின்றது. முன்னரோ பின்னரோ ஓரிடத்தில் இராமன் உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசினவ னுகின்றா னென்பதற்கையமில்லை.

இவ்வண்ணம் எம்முகந் திருப்பினும் அவ்வம் முகத்தில் இராமனதுசெய்கை எற்றுக்கொள்ளலாகாதவாறும், அது தக்கதென்று அவன் சாதிக்க முயல்வதெல்லாம் முரணிலும் பொய்யிலும் முடியவேண்டி நேர்கின்றவாறும் அமைத்துள இக் கம்பர்பெருமானது அருமையை,இத் தோல்வியால் இராமன் அடைகின்ற வோர் உயர்நிலையி லன்றோ காணவேண்டும். வென்றவர் உயர்ந்தாரென்பார் உலக வழக்கில். கடவுள் வழக்கிலோ தோற்றவரும் வென்றவராதல்கூடும். காதலிலு மவ்வாறே. காதற்கும் கடவுட்கும் பேதம் பெரி தில்லையாதலின் இது வியப்புமன்று.

இவ்வண்ண மவ் வண்ணன்தம்பி யிருவரும் மாறி மாறி வானரவீரனுக்குப் பறைந்தன யாவும் முறையில வாயின. மாநுடப் பொதுவறத்தின் மாண்பிற் கிச்செயல் அயலாயதென்பதே எஞ்சிநிற்க, இனித் தெய்வநெறியில் இதனமைதியைக் காண்பதன்முன், மனிதன்போல் நடித்த இராமனை அம்மனித இயல்பு கொண்டே மதித்து இவ்வகை அவன் அறத்தின் புறஞ்சென்ற தேனெனக் காரணம் ஏதேனும் காட்டினரோ கம்பர் என்று வினவுதலும் பயனிலதாகாது. குருதி கொப்புளிக்கும் மார்பினனுய் மாழ்கிய வாலி தன்முன் வந்துநின்ற இராமனை, ''என்னினைத்தாய் என் செய்தாய் என்று எசுவான் தொடங்கலுற்றான்'' என்றே முன்னுரை கூறினர் நம் கவிவரர். இராமன் நினைத்த தொன்றுஞ் செய்ததொன்று மாகவே அவனை மனிதனுய் மதித்தோர்க்கெல்லாம் இக்கருமந் தோன்றல் வேண்டும். கூட்டொருவரையும் வேண்டாக்கொற்றவன் தானென்பதை யயர்ந்து இவ்விராமன் தனதுயிரனைய தேவியைத் தேடியடைதற்குத் துணை வேண்டினன். அதனோடு, சுக்ரீவனுக்கு வாலியிழைத்த கொடுமைகளைக் கேட்க இவனுக்குக் கடுஞ்சின மூண்டது. துன்பமுங் கோபமும் ஒவ்வொன்றே ஒருவரது சிந்தையின் தெளிவைச் சிதைப்பதற்குப் போதும். அவையிரண்டு மொன்றுசேர்ந் திங்கு உழக்குங்கால் உரைபதறி 'உன் முன்னவனை யான் கொல்வன்' என வழங்கிவிட்டான் இராமன் என்பது ஏற்கத் தகுந்ததே. வாலிக்கு மொருசால் இக்கருத்து உதித்தது. கேட்பானவன்,

கோவியற் றரும முங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லம்
ஓவியத் தெழுத வொண்ணு
வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலுஞ் செய்கை.

[சித்திரத்தி லெழுதமுடியாத வடிவழகு உடைய இராமனே, இராஜதர்மமானது உங்கள் குலத்தில் வந்தவர்களுக்கெல்லாம் உடைமைப்பொருள் அன்றோ! அவ்வாறிருக்க, உன் உயிர்போன்றவளும் ஜனகராஜன் பெற்றவொரு அன்னப்பறவை போன்றவளும், அமிர்தம்போல் உனக்குக் கிடைத்தவளும் ஆன உன் தேவியைப் பிரிந்த பிறகு, நீ செய்வதின்னதென்று தேர்ந்திடாது இவ்வாறு தடுமாறினுய்போலும்!]

வீரமும் விதியும் மெய்ம்மையின் வாரமும் இன்றி ஒலிகடல் உலகந்தன்னில் ஊர்தரு குரங்கின்மாட்டே கலிபுகு காலம்வந்து பரந்ததோ என்னும்படி இக்கருணைவள்ளல் மன்னற வேலியைப் படுத்தாலன்ன, அரக்கரோ ரழிவுசெய்து கழிவரேல் அதற்கு வேறோர் குரக்கினத்தரசைக் கொன்ற விது; தன் குலவொழுக்கங்கெட அலமந்து செய்தவோர் செய்கையாதலால் பலபடப்பேசி யாது பயன்! இலக்குமணன்தான் காப்பது எங்ஙனம்! தெய்வத்தன்மை எய்திய மனிதர் அந்நிலை வழுவாது நிற்பதனினும், மாநுட முறையில் தன்செயலைப் புரியமுயல்கின்ற தெய்வம், செய்கைத் தத்துவமொன்றுகக் கையாளும்முறை வேறுகிக் கிடப்பதால், தான் பூண்டிருக்கும் நிலைமைக்கு முற்றிலும் இணங்கி ஒழுகுவது அருமையாகின்றது. ஆகையால், இராமன் செய்கை திகைத்தனன். இம்மறைபொருள் வெளியாக வாலிவந்து பலியாக நேர்ந்தது.

மலர் வனம்.

நக்கன மேகம் நக்கன முல்லை.

இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை என்னு மத் தொல்லோர் நல்லுரையி னுண்மையை யயர்கின்றா னொரு கொழுநன். எல்லாந் தனக்கிவளே யெனக் களவு கொள் காதலில் வருந்தினனிவன் திருமணமெய்தி மனை யறம் புகுந்த சின்னாளில், போரும் பசுழும் பொருளும் வேண்டி, இவையிலனெனச் சிலர் தூற்றும் அலர்தீர்க்கக் கருதினனாய்ப் பிறிவரிய தன் தலைவியிடம் மெல்லிய விடை கொண்டு, கார்ப்பருவம் வருதலோடு தானும் மீள்வனென்ற தேற்றுரைபணித்துச் சேணிடைச் செல்லாநின்றான். நல் லாளை நீத்தகன்று பிறிதொன்று தேடுவான் புக்க இவன் மனம் பேதைமை பெரிதுடைத்து. சென்றவன் இருந்த வன் இன்னவைக்கண்ட இயற்கைப்பொருள்கள் எங்ஙனே யெய்தலாகும் என்னுமத் தன்மையை இன்று நண்பர்காள், கண்ணங் கூத்தனார் விண்டுள வெண்பாக்களிற் கண்டு மகிழ விழைவீரேல் எம்மொடு ‘கார் நாற்பது’ கமழ்கின்ற தண்ணறுஞ் சோலையுள் வம்மின்:—

தொடியிட வாற்றா தொலைந்ததோ ளுேக்கி
வடுவிடைப் போழ்ந்தகன்ற கண்ணாய் வருந்தல்
கடிதிடி வான முரறு நெடுவிடைச்
சென்றாரை நீடன்மி னென்று.

[மாவடுவைப் பிளந்ததுபோல் அகன்ற கண்களையுடையாய், நெடியவழியிற் சென்ற தலைவரை, நெடுந்தூரமகன்று காலம் தாழ்க்கவேண்டா வென்று, கடுமையாய் இடிக்கும் மேகங்கள் விலக்கும். ஆகையால், வளைகளை அணிய இயலாமல்மெலிந்துவிட்ட உன் தோள்களைநோக்கி வருந்தாதே]

என்று தேற்றுவாள் தோழி. “எற்றுக்கு மகனே நீயகல்கின்றாய்” என இயற்கை நயமுடைய முகிற்குலங்கள் இடித்துரைத்தும் செவிகொளாது போயவன் புணர்ப்பு ஆயவிதம் காண்மின்.

செல்வர் தரல்வேண்டிச் சென்றநங் காதலர்
வல்லே வருத றெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை யிலங்கெயி றீன நறுந்தண்கார்
மெல்ல வினிய நகும்.

[விளங்குகின்ற ஆபரணங்களை அணிந்தவளே, மகளிரது பிரகாசம் பொருந்திய பற்களைப்போல் முல்லைக்கொடிகள் அரும்ப கொள்ளும்படி, நல்ல குளிர்ந்த மேகம் மெல்ல மெல்ல இனிமையாக மின்னிச் சிரிக்கின்றன. ஆதலால், பொருள்தேடிச்சென்ற நம் காதலர் இனி விரைந்து வந்து விடுவார் என்பதைத் தெளிய அறிந்துகொண்டோம்]

ஆற்றுத் தலைவியை அரிதிற்பிரிந்து பொருளிற் குகந்தானிப்பெம்மான் பெற்றபயன் யாது? பெறற்கரியவைப் பினை அகத்தேவைத்துப் புறமெல்லாம் தேடிய அந்தகன் தானுயவாறுணர்ந்து நாணமும் துன்பமும்தலைக்கொள்ளை கின்றானைக்கண்டு முன்னமே தகைந்தமேகம் இப்பொழுது நகைக்க அக்குறிப்புணர்ந்த முல்லையங் கொடிகளும், நக்கன. இக்குறிப்பு அவ் வீண்வினையாளனும் உணர்ந்தானோ?

எல்லா வினையுங் கிடப்ப வெழுநெஞ்சே
கல்லோங்கு கானங் களிற்றின் மதநாறும்
பல்லிருங் கூந்தல் பணிநோனள் கார்வானம்
மெல்லவுந் தோன்றும் பெயல்.

[மலைமகன் உயர்ந்த காடுகள் யானையின் மதம் வீசுகின்றன. கரிய வானத்தில் மழை மெல்லத்தோன்றும். கருங் கூந்தலுடைய அவள் நான் ‘ஆற்றியிரு’ என்று கூறிய சொல்லை இனிப் பொறுக்கமாட்டாள். மனமே, நம் காரியமெல்லாங்கிடக்க, இனி அவள் பால் புறப்படு]

என்று போனாற்போல் திரும்பலாயினன். மனையிகந்த வினையொன்று விம்மாநிலத்துண்டோ உரையீர்.

ரூ. 500 இனும்! எப்படி?

விபரம் தேரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். மூத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	” ”	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம்:—‘பாரதி’ கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதாராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதைபமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத் தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 15.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :— சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனி நிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய எற்ற ஆராய்ச்சிபென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆதியோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசிகப் புலவர் உமார் கயாம் காட்டுவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்ற அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சசைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. மோங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—களவுப் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப்படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர் சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், கன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி:—மார்ச்சு மாதம் 21-ந்தேதி அன்று ஆமதாபாத்திலுள்ள கூர்ஜர தேசிய வித்தியாபீட மைதானத்தின் அகிலஇந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் ஸ்ரீமான் ஜவாரிலாலின் தலைமையில் கூடிற்று. ஸ்ரீ பண்டிதர் மோட்டிலால் நேரு, மௌலானா அப்துல்கலாம் அஸாத், ஸேத் ஜமன்லால் பஜாஜ், ஸ்ரீ சி. ராஜகோபாலாசாரி, ஸ்ரீ நாகேச்வர ராவ் பந்தலு, கொண்ட வெங்கடப்பையா, ஸ்ரீமதி சரோஜனி நாயிடு, ஸ்ரீமதி கமலா சடோபாத்யாயா,முதலானவர் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

இக்கூட்டத்தில் செய்யலான நிர்மானங்களைச் "சுதேசமித்திரன்" பத்திரிகையினின்று எடுத்து இங்குப் பிரசுரிக்கின்றோம்.

"மகாத்மாகாந்தி சட்டமறுப்பை ஆரம்பித்து நடத்துமாறு அதிகாரமளித்த கார்யக்கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை அகில இந்தியகாங்கிரஸ்கமிட்டியின் இக்கூட்டம்ஆதரித்து அங்கீகரிப்பதுடன் மகாத்மாகாந்தி தமதுசட்டமறுப்புத் திட்டத்தையனுசரித்து மார்ச்சு 12ந் தேதி ஆரம்பித்திருக்கும் யாத்திரைக்காக மகாத்மாவையும் அவருடைய தோழர்களையும் தேசத்தையும் பாராட்டுகிறது. பூரண ஸ்வராஜ்யத்திற்கான இயக்கத்தைத் துரிதமாயும் வெற்றியுடனும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காகத் தேசம்முழுவதும் மகாத்மாஜீஆரம்பித்திருக்கும் காரியத்திற்கு இணங்கி வருமென்று கமிட்டி நம்புகிறது.

"காரியக்கமிட்டி அவ்வப்போது வெளியிடக்கூடிய ஆக்ஞைகளுக்குட்பட்டு மாகாண காங்ரஸ் கமிட்டிகள் தங்களுக்குத் தகுதியெனத் தோன்றும் வழியில் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்குமாறு அகில இந்தியா காங்ரஸ்கமிட்டி இதன்மூலம் அதிகாரமளிக்கிறது. ஆனால் சாத்தியமானவரையில உப்புச்சட்டங்களைச்சாத்வீகமாக மீறுவதிலேயே மாகாணங்கள் கவனத்தைச் செலுத்துமென்று கமிட்டி நம்புகிறது. கவர்மெண்டார் ஏதாவது தடைசெய்தாலும் பூரணமாகத் தயார் செய்துகொண்டே போகவேண்டுமென்றும், ஆனால் காந்திஜீ தமது யாத்திரையின் முடிவான ஸ்தலத்திற்குச் சென்று உப்புச்சட்டத்தை மீறி, இதரர்களையும் மீறுமாறு கூறும்வரையில் சட்டமறுப்பை ஆரம்பித்துவிடக் கூடாதென்றும் கமிட்டி விரும்புகிறது. ஆனால் காந்தி அதற்கு முன்னதாகவே கைது செய்யப்பட்டுவிட்டால் சட்டமறப்பு ஆரம்பிக்க மாகாணங்களுக்குப் பூரண உரிமையிருக்கும்.

"ஸர்தார் வல்லபாய்படேலும் ஸ்ரீமான் ஜே. எம். ஸென்குப்தாவும் கைதுசெய்யப்பட்டதற்கு அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி அவர்களைப் பாராட்டுகிறது. இவ்வாறு கைது செய்யப்பட்டதனால் தாமதமின்றி லக்ஷியத்தை அடையவேண்டுமென்ற தேசத்தின் தீர்மானம் தளர்ச்சியடையாமல் உறுதியாவதைக் கண்டு கமிட்டி திருப்தியடைகிறது.

"தேசிய இயக்கத்திற்கு உதவியளிப்பதற்காகக் கவர்ன்மெண்டு உத்தியோகங்களிலிருந்து ராஜினமாச் செய்துவிட்ட கூர்ஜர கிராம உத்தியோகஸ்தர்களைக் கமிட்டி பாராட்டுகிறது."

காரியக் கமிட்டியால் சிபார்சு செய்யப்பட்ட இரண்டாவது நிர்மானம் பின்வருமாறு:—

"கவர்ன்மெண்டின் செய்கையால் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் காலி ஸ்தானங்களேற்படக்கூடுமாகையால் சாதாரண முறையை அனுஷ்டிப்பது கஷ்டமாகவிருந்தால், பின்கண்ட முறை அனுஷ்டிக்கப்படலாமென்று தீர்மானிக்கப்படுகிறது:—(1) தலைவர் தமக்குப் பின் அப்பதவியை வகிக்க ஒருவரை நியமிக்கலாம். காரியக்கமிட்டியில் ஏற்படும் காலி ஸ்தானங்களைத் தலைவராக உள்ளவரே நியமனமூலம் பூர்த்தி செய்ய அதிகாரம் பெற்றிருக்கவேண்டும். (2) பொக்கிஷதாராக வேலைபார்ப்பவர் இதேமாதிரி அவசர நிலைமையில் தமக்கு அப்பதவியை வகிக்க ஒருவரை நியமிக்க அதிகாரம் பெற்றிருப்பார்.

"காங்கிரஸ் மகாசபையின் அமெரிக்கக் கிளை, பல தடவை கேட்டுக்கொள்ளப்பட்ட போதிலும் அதன் அமைப்பு அங்கத்தினர் முதலிய விவரங்களையறிவிக்க மறுத்துவிட்டதாலும், அந்தக் கிளையின் உத்தியோகஸ்தர்கள் காங்கிரஸின் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைக்கு விரோதமாகவும் அதன் முறைக்கு நேர் விரோதமாகவும் பிரசாரம் செய்து வேலைசெய்வதாக நம்பத்தகுந்த ஆதாரத்தின்பேரில் இக்கமிட்டிக்குத் தோன்றுவதாலும் அமெரிக்கக் கிளையின் இணைபு ரத்துசெய்யப்படுகிறது."

தலைவர் இம்மூன்று நிர்மானங்களையும் பிரேரேபித்துப் பேசினர். எல்லாத் நிர்மானங்களும் வாதங்களின்றி ஏகமனதாய் அங்கீகரிக்கப் பெற்றன.

* * *

சிறைத்திருத்தம்:—எமக்குவந்த, மார்ச்சு 19ந்தேதியிட்ட சட்ட இலாக்கா அறிக்கைச் சுருக்கம்.

"குற்றம் செய்யும் பழக்கமுள்ளவர்களையும்கொடிய குற்றம் செய்பவர்களையும் தவிர மற்றக் குற்றவாளிகளை மூன்றுவகுப்பாகப் பிரித்து நடத்த வேண்டும். அது குற்றவாளிகளுடைய அந்தஸ்தையும்குற்றத்தையும் பொருத்தது. இந்த வகுப்புவேறுபாட்டை மாஜிஸ்டிரேட் தண்டிக்கும் காலை நிர்ணயிக்கவேண்டும். முதல் வகுப்புக் கைதிகளுக்கு தினம் 7 அணா 4பைசா பெறுமானமுள்ள ஆகாரம் கொடுக்கப்படும். மற்றபடி வசதிகளை அவர்கள் சொந்தச் செலவில் செய்து கொள்ளலாம். சொந்த உடை தரிக்கலாம். இரண்டாவது வகுப்பினருக்கும் 2அணா 6பைசா விலைமதிப்புள்ள ஆகாரம் கொடுக்கப்படும். இவ்விரு வகுப்பினருக்கும் தனி அறை கொடுக்கப்படும். படிப்பதற்குப் புத்தகங்களும் பத்திரிகைகளும் கொடுக்கப்படும். மூன்றாவது வகுப்புக் கைதிகள் எப்பொழுதும்போல் நடத்தப்படுவார்கள். தண்டனை அடையுமுன்னும் கைதியானவர்கள் இவ்வேறுபாடுடன் நடத்தப்படுவார்கள்.

இம்மாறுதல்கள் இந்தியஅரசாங்கச் சிறைத்திருத்தச் சட்டப்படி செய்யப்பட்டதென்றும், சிறை அதிகாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் இம்முறையைக் கையாளும்படி அறிக்கை அனுப்பப்பட்டுளதென்றும் சட்ட இலாக்கா உத்தியோகஸ்தர் ஸ்ரீமான் ஜெ. வெங்கட நாராயண அறிவிக்கின்றார்.

189097

* * *

ஓர் ஹங்கேரியமாது காந்தி ஆச்ரமத்தில் சேர்ந்தார் என்றும், அவர் ஹங்கேரியாவில் உள்ள ஒரு செல்வாக்குள்ளகுடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், அவர் மூன்று வருஷத்திற்குமுன் இந்தியாவந்து எங்கும்சுற்றுப் பிரயாணம் செய்தார் என்றும், காந்தி ஆச்ரமம் அவரைக் கவர்ந்துவிட ஊர்சென்று தமது சொத்துச் சுதந்திரங்களை விற்றுவந்து அதை ஆச்ரமத்திற்கு அளித்து ஆச்ரமத்தில் வசித்துவருகின்றார் என்றும் தெரிகின்றது.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

OUR OWN PUBLICATIONS

THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA Vol. 1. 1542-1614

by THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. Rs. 10

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES

by K. C. SRINIVASAN, M.A., F.C.S. Rs. 10

THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905

by POF. BENOY KUMAR SARKAR, M.A. Rs. 4

ECONOMIC DEVELOPMENT :

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. Rs. 8.

LIFE OF BARRISTER SAVARKAR

by CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. Rs. 1-8

HINDU-PAD-PADASHAHI :

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR, M.A., Ph. D., Dacca. Rs. 3

ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA

by V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. Rs. 2

LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION

by MANGALVEDKAR, 3rd *revised edn.* Rs. 2

DIALOGUE DIVINE AND DRAMATIC

by GITANANDA BRAHMACHARI Re. 1

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம். ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கப்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினாவிடை கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி. ஜயராம ஐயர் ... 0 5 0
11. வில்லிக்ஸ் திரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிரமணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே. பி. சேஷாத்திரி ஐயங்கார் ... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணுகோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்-S. சீனிவாசையர் ... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition Re 1.
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. As. 3.
22. Book II " As. 4.
23. Book III " As. 5.
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. As. 3.
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. As. 3.
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. As. 6.
27. **The Clay Cart** (In the press) As. 6.

(V. P. Charges, Extra of the Prices.)

B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)